சுதேசமித்திரன்
17th OCT.
விலை 4 அணா
19





இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

★ தீபாவளி பண்டிகை ★

தீபாவளி பண்டிகைக்கு வேண்டிய நவீன மோஸ்தர் பட்டு ஜவுளி
தினுசுகள் எல்லாம் எங்களிடம் சரஸமான விலைகளில் கிடைக்கும்.

R. S. E.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188)

ஸன்னதி தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்
48—49, பெரிய தெரு,
கும்பகோணம்.

பம்பாயில் ஸ்பெஷல் பிராஞ்சு:—
ராதா ஸில்க் எம்போரியம்
2, விஸ்ரானிபவன், டிலாங்ரோட், G. I. P. பம்பாய்.

புரொப்ரைட்டர்ஸ் : R. K. ராதாகிருஷ்ண செட்டியார் & பிரதர்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:- 1 முதல் 3 உம்து எதிர் கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு :—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?
இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமுர்தம்.
40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்:	லக்ஷிமி & கோ.,
வால்டேர், ஆர். எஸ்.	2/135, பிராட்வே, மதராஸ்.

கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச் சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவைகள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப் படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள்:
சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,
மைலாப்பூர், : : மதராஸ்.
Sole Selling Agents:
என் ஸீ ஏஜன்ஸீஸ்,
2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.
Consult: Dr. V. ராஜரத்னம்,
For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.

நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம் பிறை வடிவாகக் கட்டினாலும் சரி, கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்கமாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும், கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங்கூந்தலைப் பெறுங்கள். சிறுவயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர் ஹவுஸிற்கு அடுத்தது
கோயமுத்தூர்.

சரும & தலை நோய்களை



உலகப் புகழ் பெற்ற ஜாம்-பெக் குணப்படுத்தும்

ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை மருந்து வஸ்துக்கள் சருமத்தினூடே புகுந்து வேலை செய்வதால் நமைச்சல், ரணம் போய், ரத்தக் கசிவு நின்று நோய் கிருமிகள் நாசமாகி பாதிக்கப்பட்ட சருமத்தை ஜாம்-பெக் சீக்கிரம் குணப்படுத்தி ஆரோக்கியமாகவிருக்கவும் செய்யும். மிருக கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்

எப்பொழுதும் உபயோகியுங்கள்

சருமநோய்கள் காயங்கள், பூச்சிகடிகள், புண்ணாகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

எல்லோரும் எங்கள் பி. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் – பாதம் என்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை – கஸ்தூரி குங்குமப்பூ – கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து – பஞ்சாப்தேன் – முத்து பன்னீர் – ஓமவாடர் – முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்க்ள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3. தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P.O. Katrisarai, (Gaya)

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.*

உங்கள் எதிர்காலம்

பணமில்லமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம. குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு. ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரபலனுக ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist, MADRAS 5.



45 வருஷமாகப் புகழும் நற்சாட்சிகளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினுல் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி
R.M. நாராயணசாமி பிள்ளை
தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும்,சில்லரையாகவும் கிடைக்கும்.

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**
28, துளசிங்கப் பெருமாள்
கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஸாயி கவசம்

(உத்தரவாதம் பெற்றது)

பரீக்ஷை, தொழில், வழக்கு, வியாபாரம், காதல் இவை வெற்றிக்கும், புத்திரன், தனம், அதிகாரம், ஞானம் இவை விருத்திக்கும், சத்துருநாசம், ஆரோக்யம், அஷ்டஐசுவரியம் இவை கைகூடுவதற்கும் இன்றியமையாதது. பிறந்த நக்ஷத்திரம் அல்லது எழுதும் நேரம் தேவை. சாதா ரூ. 3-8. ஆதித்ய ஹிருதயத்துடன் ஸ்பெஷல் ரூ. 10. தபால் சிலவு உள்பட. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

ஸாயி ஆஸ்டிரல் ஸ்டுடியோஸ்,
உறையூர் — திருச்சி.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஐப்பசி௴ 1௳ ★ 1948-௵ அக்டோபர்௴ 17௳ No. 38

காமன்வெல்த் மகாநாடு

சென்ற வாரத்தில் லண்டனில் ஆரம்பமான காமன் வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாடு அநேகம் அம்சங்களில் இந்நாட்டினருக்கு முக்கியமாக விளங்குவதாகும். இதன் நடவடிக்கைகளில்ஒவ்வொரு குடியேற்றநாட்டின் கவனமும் கவர்ந்துநிற்பது இயற்கையே. இதைப்போன்ற மகாநாடுகள் இதற்கு முன்னால் எவ்வளவோ நடந்திருக்கின்றன. அவையெல்லாம் ஆளும் வர்க்கத்தினர்களின் கூட்டமாகவே விளங்கி வந்தவை. இப்போது நடக்கும் இம்மகா நாட்டில் அடிமைத்தளை நீங்கிய இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் பிரதம மந்திரிகள் கலந்து கொள்வதால் ஏற்பட்டுள்ள நிலைமை வேறு.பிரதம மந்திரி பண்டித ஜவாஹர் இதில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

மகாநாட்டின் விஷய ஜாப்தாவில் அந்நிய விவகாரம், தற்காப்பு, பொருளாதாரம் இம்மூன்றும் முக்கியஸ்தானம் பெற்றிருக்கின்றன. இம் மூன்றிலும் டொமினியன்கள் அனைத்தும் பொதுவான, பரஸ்பரம் அனுகூலமான வேலை முறைகளை சிறக்கக் கையாளக்கூடுமாயின், அதனால் அவைகளுக்குமட்டுமில்லை, உலக முழுதுக்கும் ஒப்பற்ற நலன் உண்டு. கூட்டுத் தற்காப்பு ஏற்பாட்டின் அனுகூலங்களை விளக்கத் தேவையில்லை. குறிப்பாக, இந்த ஏற்பாட்டில் சக்தியும் அதிகம்; இதில் சேரும் நாடுகள் தனிப்பட தற்காப்புக்காகச் செய்ய நேரும் செலவும் குறைவு. சர்வதேச அளவில் இத்தகைய ஒரு ஏற்பாட்டை உருவாக்க இதுவரை நடந்துள்ள முயற்சி எதுவும் பலிக்கவில்லை. இத்துறையில் பிரிட்டிஷ் டொமினியன்களிடையே அமையக்கூடிய ஏற்பாடு உலக முழுதுமே பின்பற்றத்தக்க ஒரு உதாரணமாயிருக்கக்கூடும். பாதுகாப்பும், அந்நிய விவகாரக்கொள்கையும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புள்ளவை. டொமினியன் நாடுகள் இவற்றில் ஒன்றில் உடன்பாட்டுக்கு வந்து மற்றொன்றில் பிரிந்து நிற்பது சாத்தியமில்லை. பொருளாதாரத் துறையில் இந்நாடுகள் நெருங்கி ஒத்துழைப்பதன் மூலமும் தங்கள் வாழ்வை விசேஷமாக வளப்படுத்திக்கொள்ள வழியுண்டு.

ஆனால் மேற்குறித்த முக்கிய விஷயங்களில் டொமினியன்கள் பரிபூரணமாக ஒத்துழைப்பதாயின், அவற்றில் சில நாடுகளுக்கு தற்போதிருந்துவரும் மனத்தாங்கல்கள் முதலில் நீங்கியாகவேண்டும். குறிப்பாக ஆசிய டொமினியன்கள் சில "வெள்ளை" டொமினியன்களின் நடத்தை கண்டு நாளுக்கு நாள் கொதிப்படைந்து வருவது தெளிவு. அங்குள்ள வெள்ளையர் தங்களுக்கும், ஆசிய டொமினியன்களுக்கும் எத்தகைய தொடர்பும் இருப்பதாக நினைக்காததுமட்டுமில்லை; ஆசிய மக்களை நடத்தும் விஷயத்தில் அவர்கள் சாதாரண மனித உணர்ச்சியைக்கூடக் கைவிட்டுவிட்டனர். குறிப்பாக தென்னாப்பிரிக்காவில் ஆதிக்கம் செலுத்தும் வெள்ளையர் கும்பல் செய்து வரும் அட்டூழியம் அனைவரும் அறிந்ததுதான். இன்னொரு டொமினியனுக ஆஸ்திரேலியா வெள்ளையரைத் தவிர வேறு யாரும் அங்கு குடியேற விடப்போவதில்லையென்று இன்னும் பகிரங்கமாகப் பறையடித்துக்கொண்டிருக்கிறது. ஒரே தொகுதியைச்சேர்ந்த டொமினியன்கள் என்று சொல்லிக்கொண்டு ஒன்றையொன்று ஈனமாக நடத்தும் விபரீதம் நீடிக்கும்வரை, அவைகளிடை பொதுநலம் என்பதோ, ஒத்துழைப்பு என்பதோ எவ்வாறு ஏற்பட முடியும்?

தென்னாப்பிரிக்காபோன்ற டொமினியன்களின் நடத்தையால் எழுந்துள்ள பிரச்னை



சென்ற 8, 9. 10-ந்தேதிகளில் சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்ற கம்பர் திருவிழாவை மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் ஆரம்பித்துவைத்தார். ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் தலைமை வகித்தார்.

கள் சிக்கலானவை. பிரிட்டன் இத்தகைய பிரச்னைகளில் நேரடியாகத் தலையிடக்கூடிய காலம் கடந்துவிட்டது. அந்நாடுகள் டொமினியன்களென்று அழைக்கப்பட்ட போதிலும், உண்மையில் முற்றிலும் சுதந்திரமான நாடுகளே. அவற்றின் விவகாரம் எதிலும் குறுக்கிட பிரிட்டனுக்கு அதிகாரமில்லை. எனினும் தன்னைப் பொறுத்தவரை, இத்தகைய நிற்பேதப் பிரச்னைகளில் தனது கருத்து என்னவென்பதைப் பிரிட்டன் தெளிவாக்கிவிடலாம். அதைப் பகிரங்கமாகச் சொல்வதற்கு ஒரு தடையுமில்லை. தென்னாப்பிரிக்காபோன்ற இடங்களில் நிறத்திமிர் காரணமாக நடக்கும் அநீதங்களைத்தான் எவ்விதத்திலும் ஆதரிக்கவில்லை என்று பிரிட்டன் பகிரங்கமாக உணர்த்துமாயின், அதனால் உடனே மலான் கும்பலின் வெறி ஒடுங்கிவிடுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. எனினும் பிரிட்டன் அவ்வாறு அழுத்தமாக வெளியிடும் கருத்து நாளடைவில் மற்ற டொமினியன்களில் ஆக்கம் பெறாமல் போய்விடாது. இதைவிட உடனடியாக பிரிட்டிஷ் அந்தரங்கத்திலும், நேர்மையிலும் ஆசிய நாடுகளுக்குள்ள நம்பிக்கை இத்தகைய அறிக்கை மூலம் விசேஷமாகப் பெருகுவது இன்னும் முக்கியமாகும்.

நிறபேதப் பிரச்னையைத்தவிர, இந்தியருக்கு வீணாக எரிச்சலுண்டாக்கக்கூடிய இன்னொரு விஷயமும் உண்டு. இதற்கு பிரிட்டனிலுள்ளவர்களே ஜவாப்தாரிகள். அங்குள்ள சிலர் இன்னும் இந்தியாவின் புதிய அந்தஸ்தை முற்றிலும் உணர்ந்ததாகக் காணவில்லை. முன்போலவே இன்னும் இந்நாட்டின் சொந்த விவகாரங்களில் தலையிட்டு விஷமம் செய்யத் தங்களுக்கு அதிகாரமிருப்பதாக அவர்கள் கனவு காண்கின்றனர். முக்கியமாக ஹைதராபாத்பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நடந்த விவாதம் குறிப்பது அதைத்தான். அங்கு சர்க்காரில் பொறுப்புள்ள பதவி வகிக்கும் பெவினும் இந்நாட்டை நெறியற்ற முறையில் பேசத் துணிந்தது இங்கு எரிச்சலை இன்னும் வளர்த்திருப்பது இயற்கையே. மேற்குறித்த விஷயங்களில் இந்நாட்டு மக்களின் கருத்தை எடுத்துக்காட்டவும், மற்ற டொமினியன்களின் மனோபாவத்தை நேரில் கண்டறியவும் பிரதம மந்திரி ஜவாஹரே லண்டன் மகாநாட்டில் பிரசன்னமாகியிருக்கிறார். இறுதியாக அதில் ஏற்படும் முடிவுகள் இந்த டொமினியன்களின் தொகுதிக்குள் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் பெருக உதவுமென்று நம்பலாம்.

———



சன்னையிலுள்ள லீவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட் கிளை மானேஜர் மிஸ்டர் ஸி. ஈ. பெங்ஹாமுக்கு சென்னை காரியாலயத்தினர் நடத்திய பிரிவுபசாரத்தின்போது எடுத்த படம். ஸ்ரீமான்கள் ராமஸ்வாமி, மாதவாச்சாரியார், ராஜகோபாலய்யங்கார் முதலியவர்களைக் காணலாம்



ரஷ்யாவுக்கும் மேல்நாட்டுப் பிரதிநிதிகளுக்குமுள்ள வித்தியாசம் அவர்கள் உடுத்துள்ள உடைகளில்கூடத் தெளிவாகிறது. ஐ. நா. சபை மெம்பர்களுக்கு பிரான்ஸ் தலைவர் வின்ஸன்ட் ஆரியோல் நடத்திய உபசாரத்தின்போது எடுத்த படம். (இடது) ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த இவாட், (ஐ. நா. சபை தலைவர்) ஜார்ஜ் மார்ஷல் (யு. எஸ்), தலைவர் ஆரியோல் (பிரான்ஸ்), பெவின் (பிரிட்டன்), விஷின்ஸ்கி (ரஷ்யா).



★

(மேல் படம்)

இந்திய நடனக் கோஷ்டிக்கு நியூயார்க்கில்மேயர் வில்லியம் ஓ' டயர் (மத்தியில் நிற்பவர்) வரவேற்பளிக்கிருர். நடனக் கோஷ்டியைச் சேர்ந்த குமுதினியோடு அவர் சம்பாஷிக்கிருர்.

(கீழ் படம்)

நியூயார்க் எம்பயர்ஸ்டேட் கட்டிடத்தில் ராம்கோபால் நடனக் கோஷ்டியைச்சேர்ந்த மூவர் இம்மாதம் முதல் தேதி நடனமாடிக் காட்டினர்.

★



நியூயார்க்கில் இந்திய நடன கோஷ்டி



ராம் கோபால் நடன கோஷ்டியைச் சேர்ந்த நாட்டியக்காரர்கள் சமீபத்தில் அமெரிக்கா போய்ச் சேர்ந்தனர். நியூயார்க் ஸிடி ஸெண்டர் தியேட்டரில் இவர்களது நடனக் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. இந்திய சர்க்கார் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். சர்வதேச நடன விழா அங்கு நடக்கிறது. (இடமிருந்து) சேவந்தி, லீலாவதி, பானுமதி, குமுதினி, விமானத்திலிருந்து இறங்குகின்றனர்.

கௌதாரி, மைனு போன்ற பட்சி இனத்தில் காடை என்பதும் ஒன்று. ரொம்ப சிறிய பட்சி அது. மணல் பாங்காக உள்ள பிரதேசங்களில் பறந்து திரிந்து இரை தேடுவது காடைகளின் வழக்கம். கௌதாரி, மைனு, போன்ற பறவைகளை வலைவீசிப்பிடிப்பது போலவே வேடர்கள் காடைகளையும் பிடிப்பார்கள். இரை தேடவரும் காடைகள், கண்ணிகளில் சிக்கிக்கொண்டவுடன் வெளியே பறந்து செல்லாமல் தடுப்பதற்காக வேடர்கள் கூடையொன்றை அப்பறவையின்மீது கவிழ்த்துவிட்டு, இதேமாதிரி சிக்கிய மற்ற பட்சிகளையும் பிடிக்கப் போவதுண்டு. இங்ஙனம் மடக்கிச் சிறைப் படுத்தப்பட்ட ஒரு காடை படு தந்திரமாக வெளியேறி விடுகிறது! வேடனின் யுக்தி அதனிடம் பலிக்கவில்லை. அதாவது கவிழ்க்கப்பட்ட கூடைக்குக் கீழே இரண்டு கால்களாலும் மணலைப் பறித்து சுரங்கமாதிரி வழியை ஏற்படுத்திக்கொண்டு இடைவெளி வழியாகச் சரேலென்று பறந்துபோய் விடுகிறது. வேடன் ஏமாந்து போகிருன்.



இந்தக் காடையைப்போல மனமும் ஒரு பறவைதான். திருவாதிரைதினத்தன்று தில்லையம்பலத்தே நடனம் செய்யும் அமரர்பிரானை தரிசிக்கத் துடிதுடித்த நந்தனின்பக்தி உள்ளம் எத்தகைய அற்புதமான பறவை! சிதம்பரம் என்ற சொல்லைக்கூட உச்சரிக்கக்கூடாது என்று வேதியர் விதித்த தடையைத் தாண்டி நந்தனனின் மனப்பறவை அதிதுரிதமாகச் சிதம்பர க்ஷேத்திரத்தை அடைந்துவிடுகிறது. அவன் சடலம் மட்டும், வேடன் கவிழ்த்த கூடைபோல, இருந்த இடத்திலேயே கிடந்ததேயன்றி அவனுடைய "பக்தியும் மனமும் தில்லையம்பதியிலே போய் பொருந்தி விட்டன! சிறந்த பக்தனின் மனப்பறவையின் வேகத்தை நந்தனுர் சரிதையிலே காண்கிருேம்.

காடையைப் போன்று பறந்து சென்ற இன்னெரு மனப்பறவையைப்பற்றி 'முத்தொள்ளாயிரம்' பாட்டொன்றில் ரஸமான விவரம் இடம் பெற்றிருக்கிறது.

பாண்டியன் படைகள் புடைசூழப் புறப்பட்டு பவனி வந்துகொண்டிருக்கிறுன். தெருவழியே போய்க்கொண்டிருக்கையில் பவனி ஒரு வீட்டின் வாசலில் வந்து நிற்கிறது. அந்த வீட்டிலுள்ள பெண், ஊர்வலத்தில் வரும் பாண்டிய மன்னனை ஜன்னல்வழியாகப் பார்த்துவிடுகிருள். இதை அந்தப்பெண்ணின் தாயார் கவனித்துவிடவே வெகு அவசரமாகத்தன் 'பெண் பாண்டியன் மீது காதல் கொண்டு விட்டால் என்ன செய்கிறது?" என்ற கவலையோடு சர சரவென்று மகளை இழுத்துக்கொண்டுபோய் வீட்டின் பின்புறத்தில் மறைந்திருக்கச் செய்துவிடுகிருள்.

ஆனுல், வேடனின் கூடையிடன்கீழ் அகப்பட்ட காடையைப்போல, பெண்ணின் உடல்மட்டும்தான், வீட்டின் பின்கட்டில் இருந்தது. மனம் பாண்டியனின் பவனியோடு பவனியாகப் பறந்தோடி விட்டதை அவளுடைய தாய் எப்படி அறியப்போகிருள்? பாண்டியன் வசப்பட்ட மனம், அவனேடு சரஸ ஸல்லாபமடிப்பதாகக் கருதுகிறது. இத்தகைய இன்ப லோகத்தில் சஞ்சரிக்கும் பெண்ணின் மனதைத் தாயினுல் கட்டுப்படுத்த முடிந்ததா? இந்தக் கருத்தை மேற்படி பெண் வெளியிடுவதாகவுள்ள பாட்டு இதோ!—

கோள்தெங்கு சூழ் கூடல்
    கோமானைக் கூட, என
வேட்(டு) அங்கு சென்ற என்
    நெஞ்சறியாள். கூட்டே
குறும்பூழ் பறப்பித்த
    வேட்டுவன் போல், அன்னை,
வெறுங் கூடு காவல் கொண்டாள்

[கோள்தெங்கு கூடல்—குலைகுலையான தேங்காய்கள் காய்த்துக் குலுங்கும் தென்னை மரங்களுள்ள மதுரை; வேட்டு-ஆசைப்பட்டு; கூட்டே-பத்திரமாகவைத்த கூடு; குறும்பூழ்—காடைப் பட்சி; பறப்பித்த-மணலைப் பறித்துக்கொண்டு பறந்துபோக இடம் கொடுத்து ஏமாந்த; வேட்டுவன்-வேடன்]

இரண்டாம் தாரம்

தில்லைவாசி

மலையடிவாரத்திலிருந்து தள்ளி பதினைந்து மைல் தூரத்திலிருந்த அந்த ஊர் ஒரு தாலூகாவின் தலைப்பட்டணமும்கூட. அனுமானுடைய அருள்தானோ என்னவோ அந்த ஊரின் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு, அனுமார் கோயில் கிணற்று தண்ணீர் அவ்வளவு நல்ல தண்ணீராக அமைந்துவிட்டது. ஊரில் உள்ள எல்லாக் கிணறுகளையும் விட அதன் தண்ணீர்தான் நன்றாயிருக்கிறது என்று பேசிக்கொள்வார்கள்.

அவ்வூரில் உள்ள கிணறுகள் அத்தனையும் வருஷத்தில் ஆறு மாதங்கள்தான் தண்ணீர் கொடுக்கும். அதுவும் உவர்ப்பு நீராகத்தான். மற்ற ஆறு மாதங்களிலோ, ஒவ்வொரு கிணற்றின் அடிப்பாகத்தையும் பார்த்துவிடலாம். அவைகள் எல்லாம் பாறையைக் குடைந்து தோண்டிய கிணறுகள்.

அத்தகைய ஊரில் அந்த அனுமார் கோயில் கிணற்றில்மட்டும், என்றும் வற்றுமல் நீர்சுரந்து கொண்டிருந்தது. குடிப்பதற்கு நல்ல தண்ணீராகவும் அமைந்திருந்தது. இதை ஏன் அனுமாரின் வரப்பிரசாதம் என்று சொல்லக்கூடாது?

ஏழைகளாக இருந்தவர்கள் தாங்களே அந்தக் கிணற்றுக்குப் போய்த் தண்ணீர் கொண்டு வருவார்கள். மற்ற செல்வந்தர்களோ பெரிய உத்தியோகஸ்தர்களோ, ஆள் வைத்து, குடி தண்ணீர் கொண்டு வந்து கொட்டும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்படித் தண்ணீர் எடுத்துக்கொண்டு போய் வீட்டுக்கு வீடு கொடுப்பதையே பிழைப்பாகக் கொண்டு ஜீவனத்தை நடத்தி வந்தார் சுப்பய்யர். பதினைந்து வீடுகளுக்குத் தண்ணீர் கொண்டு போய்க் கொட்டி வந்தார். தலைக்கு இரண்டு ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள். மாதம் எப்படியும் முப்பது ரூபாய் முழுசாகக்கிடைத்துவிடும். அதை வைத்துக் கொண்டே அவரும் குடித்தனத்தை நடத்திவந்தார். பொழுதும் கழிந்து கொண்டிருந்தது.

சுப்பய்யரை ஏழையிலும் ஏழையென்றுதான் சொல்லவேண்டும். எவ்விதமான ஆஸ்தியும் கிடையாது. பகவான் அவருக்குப் பெரியக் குடும்பத்தைக் கொடுத்திருக்கவில்லை. அவரும், அவருடைய மனைவியுந்தான். இந்தத் தம்பதிகள் பனிரண்டு வருஷங்கள்வரை கிடைத்ததைக்கொண்டு மிகவும் திருப்தியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

“நமது வறிய நிலையை அறிந்துதான் கடவுள் நமக்கு புத்திர பாக்கியம் அளிக்கவில்லை. அந்த மட்டும் நாம் தப்பித்தோம். அதிர்ஷ்டசாலிகள்தான்” என்று அவர்கள் அடிக்கடி சொல்லி சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பதுண்டு. அப்படி உள்ளத்திருப்தியுடனிருந்தவர்களை இன்னும் அதிகம் சோதிக்கத்தானோ என்னவோ, அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்துவிட்டது அத்தனை வருஷங்களுக்குப் பிறகு. சுப்பையரும் ஆண் குழந்தையாகப் பிறந்திருந்தால், மிகவும் அலட்சியமாக இருந்திருப்பார், பெண் பிறந்தநாள் முதற்கொண்டு அவ்விருவருடைய கவலையும் அதிகரித்துவிட்டது.

அந்தப் பெண் பிறந்தவுடனேயே அவர்களும் அவள் கல்யாணத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். கவலையும் அவர்களைப் பற்றிக் கொண்டு விட்டது. மகளின் கல்யாணத்தை உத்தேசித்து காசும் சேர்க்க ஆரம்பித்து விட்டார்கள். சுப்பய்யரும். தனக்குக் கிடைக்கும் வருவாயில் மீதம் காணும் பணத்தில் ஐந்தோ, பத்தோ சௌகரியப்படும் போதெல்லாம், தபாலாபீசில் போட்டு வந்தார். அவருடையப் பெண் சுந்தரியும் வளர்ந்து பதினாறு வயது பருவ மங்கையாக மாறிவிட்டாள்.

சுந்தரியின் பெற்றோர்களுக்கு அவள் அதிக சீக்கிரத்தில் வளர்ந்துவிட்டாள் என்ற கவலை, இதுதான் வாழ்க்கையில் விசித்திரம். செல்வந்தர்கள் தங்கள் பெண் சீக்கிரம் வளர்ந்து பெரியவளாக ஆகவில்லையே என்று கவலைப்படுகிறார்கள் அவளுக்கு விவாகம் செய்வித்து, பேரன் பேத்தி எடுக்கவேண்டுமென்கிற ஆசையினால். ஏழைப்பெற்றோர்களோ, "ஏன் இப்படி அதற்குள்வளர்ந்துவிட்டாள்?" என்று ஆத்திரப்படுகிறார்கள், காலாகாலத்தில் அவளுக்கு விவாகம் செய்து வைப்பதற்குத் தங்களிடம் பணமில்லையே என்ற கவலைதான் காரணம்.

சுந்தரிக்கும் தன் தாய் தந்தையர் படும் கஷ்டம் தெரியாமலில்லை தான் அவர்களுக்கு ஒரு பாரமாக இருப்பதையும் அறிந்துதானிருந்தாள். தன் கல்யாணத்தைப்பற்றி அவர்கள் கவலையடைந்து வருவதையும் அவள் அறிந்துகொண்டிருந்தாள். இன்றைக்கெல்லாமிருந்தால் சுப்பையரால் ஒருநாற்பது அல்லது ஐம்பது வயது வரனைத்தான் தேடித்தரமுடியும். அந்த நிலைமைக்குக்கூட செலவு செய்வதற்கு அவரிடம் பணமில்லை. தபாலாபீசிலிருக்கும் நூறு ரூபாயைக் கொண்டுதான் எப்படியும் காரியத்தை ஒப்பேற்றவேண்டும்.

* * * *

ஊருக்கு அப்பால் இரண்டு மூன்று பர்லாங்கு தூரத்திலிருந்த காட்டாற்றில் குளித்துவிட்டு, ஒருநாட் காலையில் திரும்பி வந்துகொண்டிருந்தான் ராமு. அப்பொழுது சுந்தரியும், அவள் தாயும், ஆற்றுக்குக் குளிக்கப் போய்க்கொண்டிருந்ததை அவனால் கவனிக்காமலிருக்க முடியவில்லை. ஜனங்கள் குளிக்கவேண்டுமென்றால், அந்த ஆற்றுக்குத்தான் வந்தாகவேண்டும். கிணற்றில் அவ்வளவு ஆழத்திலிருந்து தண்ணீர் இழுத்துக் குளிப்பதைவிட, ஆற்றுக்கு கொஞ்சதூரம் நடந்துபோய் குளித்துவிட்டு வருவதுதான் நல்லது என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். அதை உத்தேசித்துத்தானோ, என்னவோ, அந்தக் காட்டாறும் வருஷம் பூராவும் வற்றாமல் ஓடிக்கொண்டிருந்தது.

அக்டோபர் 2-ந்தேதி



புட்டிக்கடை:—உன் பாட்டிலையும் எடுத்துகிட்டு வாண்ணே! கள்ளுக்கடைக்குப்போய் குடிச்சிட்டு வரலாம்..."

தலைப்பாக்காரர்:—எந்த உலகத்திலே இருக்கேப்பா! இன்னிலேந்து கள்ளுக்கடைங்கவெல்லாம் ஒழிஞ்சி போயிட்டதே, மறந்துட்டியா..."

புட்டிக்காரர்:—மரக்கலண்ணே! கள்ளுக்கடைலே டி கொடுக்கிறாங்களாம் வாங்கி குடிச்சிட்டு வரலாம் வா...."

ஆறு ஊருக்கு வெகு அருகாமையில் ஓடிக்கொண்டிருந்த இடத்தில் ஐந்தாறு குளிக்குந் துறைகள் ஏற்பட்டிருந்தன. அவ்விடத்தில் காட்டை யழித்து நந்தவனமாகச் செய்திருந்தார்கள். அங்கு சென்றுவிட்டால், கண்ணிறைந்த இயற்கைக் காட்சிகளைத்தான் காணலாம். பற்பலப் பூக்களின் நறுமணம் வீசிக்கொண்டிருக்கும். சிறியதும் பெரியதுமான பசுமையான மரங்கள் கண்ணுக்கு விருந்தளிக்கும். சிந்தனைக்கு வேலை கொடுக்கும் ஒரே இயற்கைக் காட்சிகள். மனதைப் பரவசப்படுத்தும் தோற்றங்கள். ஆற்றின் தண்ணீரால் நனைந்தும், நனையாமலும் கிடக்கும் மணல் மேடுகள். ஆற்றில் ஒரு சமயம் முழங்கால் அளவு தண்ணீர்—இன்னொரு சமயம் இடுப்பளவு தண்ணீர் இப்படிப்பல தினுசாக ஆறும் ஓடிக்கொண்டிருக்கும்.

அந்த ஆற்றின் தோற்றம் எந்த வேளையிலும் அழகாகயிருக்கும். சாயந்திரவேளையிலோ அதன் அழகு பன்மடங்கு பெருகி, அஸ்தமன சூரியனின் செங்கிரணங்களுடன் கலந்து, மிகவும் ரம்மியமாகக் காட்சியளிக்கும். காலையிலும், மாலையிலும், அந்தக் குளிக்குந் துறைகளில் ஒரேகூட்டமாக ஜன சந்தடியிருக்கும். மாலையில் உல்லாஸமாகப் பொழுதுபோக்கிற்காக ஆண்களில் ஒருசிலரும்பெண்களில் பலரும்குளிப்பதற்காக வந்துவிட்டுப் போவார்கள்.

இத்தகைய இயற்கைக்காட்சிகளில் மயங்கித்தான் போலும், ராமுவும் காலையில் குளிப்பதற்காகவும், சாயந்திரத்தில் பொழுதுபோக்குவதற்காகவும் அந்தத் துறைக்குத் தவறாமல் போய்க்கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் சுந்தரியை முதன் முதலாக அன்று அவன் சந்தித்தான். அதற்குப் பிறகு அவனும் அவளை எத்தனையோ முறை ஆற்றுக்குப்போவதையும், வருவதையும் பார்த்திருக்கிறான். அனுமார்கோயில் கிணற்றில் சுந்தரி தண்ணீர் எடுக்கும்போது எத்தனையோ தடவைகள் அவர்கள் இருவருடைய கண்களும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

ராமு, சுந்தரி வசித்துவந்த சிவன்கோயில் அக்கிரகாரத்திற்கு அடுத்தத் தெருவில் தன் தாயுடன் வசித்து வந்தான். தகப்பனார் அவன் சிறு பையனாகவேயிருக்கும் பொழுது கண்ணை மூடிவிட்டார். தாய் எவ்வளவோ கஷ்டப்பட்டு அவனையும் பத்தாவது வரைக்கும் படிக்க வைத்திருந்தாள். அவன் தகப்பனார் இறந்ததும், கிடைத்த ஆயிரம் ரூபாய் இன்ஷூரன்ஸ் பணம் குடும்பம் நடத்துவதற்கும் அவன் படிப்பதற்கும், மட்டுமே சரியாயிருந்தது. அந்தப்பணம் கரைவதற்கும், ராமு படித்து முடிப்பதற்கும் ஒற்றுமையாகயிருந்தது. இனிமேல் ராமு எங்காவது ஒரு உத்தியோகத்தில் அமர்ந்து சம்பாதித்தால் பொழுது போகும். இரண்டு வருஷங்களாக ராமுவும் வேலைக் கலைந்தான். சர்க்கார் வேலை எங்கும் கிடைக்கவில்லை. உத்தியோகத்திற்காக பல விண்ணப்பங்கள் போட்டுவிட்டு அவனும் ஊரைச் சுற்றிக் கொண்டு வந்தான்.

அனுமார் கோயிலுக்குப் பின்புறத்தில் பஞ்சாயத்துப் போர்டார் வைத்திருந்த ரேடியோவிருந்தது. கோயிலுக்கு கொஞ்சதூரத்தில் பள்ளிக்கூடத்தின் விளையாடும் மைதானமிருந்தது

ராமுவை வீட்டில் பார்க்க முடியா விட்டால், ரேடியோவின் அருகிலோ, விளையாடும் மைதானத்திலோ, ஆற்றுத் துறையிலோ பார்த்து விடலாம்.

'ஒரு சாயந்திரம் சுந்தரி அனுமார் கோயில் கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொண்டிருப்பதை ராமு பார்த்து விட்டான். அன்று முதல் அவன் தவருமல் கோயிலுக்குப் பின்புறத்திலிருந்த ரேடியோவிற்குப் போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது எல்லாம் ராமு, சுந்தரி கண்கள் சந்திப்பு அதிகமிருக்கும். இருவருடையபுன் முறுவல்களும் கலந்து விடும்

ஒரு நாள் சுந்தரியின் தாய் ஊரிலில்லே. அன்று சுந்தரிமட்டும் ஆற்றுக்குக் குளிக்கப் போனுள். அப்பொழுது ராமு ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தான். வேறு யாரும் அங்கில்லே. அவர்கள் இருவரும் மனம் விட்டுப் பேச முடிந்தது.

ராமுவும் தன்னைப் போல் ஒரு ஏழை என்பதை சுந்தரி அறிந்தாள. அவன் குலம், கோத்திரத்தைப்பற்றியும் தெரிந்து கொண்டாள. அதுவும் சரியாக அமைந்திருந்தது. சுந்தரியைப்பற்றின முழு விபரத்தையும் அவன் அறிந்து கொண்டான்.

இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினர். அவர்கள் உள்ளங்களும் ஒன்றுபட்டிருந்தன.

அப்பொழுது ராமு "ஒரு விஷயத்தை உனக்குச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தேன். இன்று சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. எனக்கு உத்தியோகத்திற்கு வரும்படி உத்தரவு கிடைத்திருக்கிறது. கோயமுத்தூரில் வேலே. சம்பளம் நூறு ரூபாய். நானும் என் தாயாரும் இன்னும் ஒரு வாரத்தில் இந்த ஊரை விட்டே போய்விடுவோம். வேலேயில் அமர்ந்த மூன்று மாதங்களுக்குப்பிறகு எனக்கும் வேலே நிலேத்துவிடும். அதன் பிறகு முதல் வேலேயாக உன்னே மணந்து கொள்ளவேண்டியதுதான். உன் தகப்பனருக்குக் கடிதம் எழுதுகிறேன். உனக்கும் எழுதுகிறேன், பிறகு மாப்பிள்ளேயாகப் பெண் பார்க்க உங்கள் வீட்டுக்கு வருவேன். நீ கவலேப்படவேண்டாம். உன்னேத்தவிர யாரையும் கைப்பிடிக்க மாட்டேன். நீ மட்டும் உன் தகப்பனர் அவசரப்பட்டார் என்று யாராவது கிழவனைக் கட்டிக்கொண்டுவிடாதே" என்று எவ்வளவோ ஆசையாகவும் நம்பிக்கையாகவும் சொன்னுன்.

சுந்தரியும் "நீங்கள் என் மனக் கோயில் புகுந்துவிட்டீர்கள். என் நம்பிக்கையை சிதறடித்து விடாதீர்கள். உங்களால் என் அப்பா அம்மா கவலேயும் நீங்க வேண்டும். உங்களேத் தவிர வேறுயாரையும் மணக்கச் சம்மதிக்க மாட்டேன்" என்று கூறும் போது அவளுக்குக் கண்ணீர்கூட வந்துவிட்டது. பாவம்! அவ்வளவு தூரம் பெற்றேர்கள் அவள் விவாக விஷயமாக தினம் கவலேப் பட்டுக்கொண்டிருந்ததை அறிந்திருந்தாள்.

சுந்தரியும் ராமுவும் பிரிய மனமில்லாமல் பிரிந்தனர்.

சொல்லியபடி ராமுவும் கோயமுத்தூருக்குப் போய்விட்டான். சுந்தரியும் ராமுவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்திருந்தாள். கிணற்றில் தண்ணீர் எடுக்கப் போகும்போதெல்லாம், அனுமாரை வணங்கி, கோயிலேச் சுற்றி விட்டு வருவாள்.

"என் மனதைக் கவர்ந்த ராமுவே எனக்குக் கணவனுக வாய்க்க வேண்டும். அப்பா, அம்மா கவலேயும் நீங்கவேண்டும். நாற்பது ஐம்பது வயதில் எந்தவிதமான இரண்டாந்தார வரனேயும் என் தலேயில் கொண்டுவந்து கட்டாமல் இருக்கவேண்டும்" என்று ஒவ்வொரு நாளும் உருக்கமாகப் பிரார்த்தனே செய்துவிட்டு வருவாள்.

நாள்தோறும், ராமுவினிடமிருந்து தபாலே எதிர்பார்த்து வந்தாள் சுந்தரி. "மறுநாட் காலேயில் ஏதாவது தபால் ராமுவிடமிருந்து வரும்" என்ற நினேப்பில்



எத்தனையோ இரவுகளில் நித்திரையில்லாமல் படுத்து எழுந்திருந்து இருக்கிறாள். "எப்போது பொழுது விடியும். அந்தத்தபால்காரனும் நம் வாசல்முன் வருவான்" என்று ஒவ்வொருநாளும் ஆவலோடு இருந்திருக்கிறாள்.

காலை ஒன்பது மணிக்குத்தான் தபால்காரனும் அவள் தெருப்பக்கம் வருவான், அவளும் அதற்குள் வீட்டுக் காரியத்தை முடித்துவிட்டு வெளியில்வந்து காத்துக் கொண்டிருப்பாள். தகப்பனார் வெளியில் போயிருக்கும் அந்த நேரத்தில் எப்படியாவது தனக்கு வரும் ராமுவின் கடிதத்தை வாங்கி யாரும் அறியாமல் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையோடு நின்றிருப்பாள். ராமு ஊருக்குப்போய் ஆறுமாதங்களாகியும், கடிதம் வராததினால் அதிகப் பரபரப்பும் கவலையும் அடைந்திருந்தாள்.

அன்றும் வழக்கம்போல் தபால்காரனின் வரவை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தாள். அதோ தபால்காரனும் கிட்ட நெருங்கிவிட்டான்! அவளைக் கண்டதும் கையில் அடுக்கி வைத்திருக்கும்கட்டைப் பிரித்து எடுக்கிறான். அவள் இருதயம் எவ்வளவோ படபடப்பாக அடித்துக்கொண்டது. அவள் எதிர்பார்த்திருந்தக் கடிதம் கடைசியாக அவளிடம் வந்துகொண்டிருக்கிறது.

"தன் கஷ்டம் நீங்கிற்று தனக்கு வரப்போகும் இரண்டாந்தார மாப்பிள்ளை ஆபத்தும் அகன்றுவிடும்" என்று எண்ணி அவள் மனம் துடித்துக்கொண்டிருந்தது. கோயமுத்தூரில் ராமுவுடன் குடித்தனம் பண்ணுகிறக் காட்சியும் அவள் கண்முன் நின்றது. அவனுடைய அன்பு வழிந்த முகம், கள்ளங்கபடமற்ற உள்ளம் இவைகளைக் கற்பனை செய்துகொண்டு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

கடிசமும் அவள் எதிர்பார்த்திருந்தபடி ராமுவிடமிருந்தே வந்திருந்தது. ஆனால் எதிர்பார்த்திருந்த சமாசாரத்துடன் வரவில்லை. அதைப் பிரித்துப் படிப்பதற்குமுன் அதை என்றென்றும் வைத்துப் பூஜை செய்து கொண்டிருக்கவேண்டுமென்று எண்ணினாள். படித்தவுடனே அதைக் கிழித்து அடுப்பில் போடுவதைவிட அவளுக்கு வேறு வழியில்லை.

அதைப் படிக்கப் படிக்க அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. பாவம்! அவள் ஏமாந்து போனாள்! அன்றே ராமுவுக்கு ஒரு பதிலும் எழுதிப்போட்டாள்.

* * * * *

"உங்களை நான் எப்படி அழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை உங்கள் கடிதத்தை ஆறுமாதகாலமாக எதிர்பார்த்திருந்தேன். இன்று எதிர்பாராத விஷயத்துடன் வந்து சேர்ந்திருக்கிறது. நம்பிக்கை வைத்திருந்தேன், ஏமாந்து போனேன். என்னென்னவோ கனவு கண்டு கொண்டிருந்தேன். அத்தனையும் பிரயோஜனமற்றதாகி விட்டது. இப்படி நீங்கள் தலையில் கல்லைத் தூக்கிப் போடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"இன்று என் ஜாதகத்தில் தோஷமிருக்கிறது என்று சொல்லுகிறீர்கள். அன்று மனப்பொருத்தமிருந்தது. எல்லாம் பொருத்தமாக இருந்தது. ஏனோ இன்று ஜாதகத்தின்மேல் பழியைப் போடுகிறீர்கள் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. உன்னைப் பிடிக்கவில்லை. உன் ஏழைமைத்தனம் பிடிக்கவில்லை என்று சொல்லியிருக்கலாம். என் அம்மாவின் கைப் பிள்ளை நான். அவள் பிரியப்படி வேறு பணக்காரப் பெண்ணை மணந்து கொள்ளப் போகிறேன் என்று எழுதியிருக்கலாம். நமது உள்ளங்கள் ஒன்றுபட்டதற்கு கோயில் கொண்டு விளங்கும் அனுமான் தான் சாட்சி. அவர் என்னை ஒரு நாளும் கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையுடனிருக்கிறேன். அவ்வளவுதான். மறந்து விடுகிறேன்" என்று படித்த ராமுவும் சுந்தரியின் கடிதத்தைக் கசக்கி அடுப்பில் போட்டான்.

* * * *

மூன்று வருஷங்கள் பறந்தோடின. சிவன்கோயில் அக்கிரகாரத்தில் சுந்தரியின் வயதையொத்த இரண்டு மூன்று பெண்களுக்குக் கூடக் கல்யாணங்கள் ஆகிவிட்டன. சுந்தரி நல்ல அழகியாக இருந்துங்கூட அவளுக்கு இத்தனை நாளாகக் கல்யாணமாகாமலிருந்தது தான் விந்தை.

சுப்பய்யரும் இரண்டாந்தார வரன்களாக எத்தனையோ வரன்கள் பார்த்தார். எத்தனையோ பேர்கள் பெண்ணை வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். சுந்தரிக்கு அந்த மாப்பிள்ளைகள் யாரையும் பிடிக்கவில்லை. "நீங்கள் சும்மா கிடங்கள். ஏழை வீட்டில் பெண் பிறந்து விட்டால், அவள்



"சங்கீத வித்வான் கும்பகோணம் நாணுவை ட்யூஷனுக்கு ஏற்பாடு பண்ணினேனே! ஏன் 3 நாளைக்கெல்லாம் நிறுத்திட்டேள். சிக்ஷை சுகப்படலையோ......"
"அதுவா? கொளுக்கு யார் விட்டுக்குப்போனாலும் பாடசொல்லி பிராணனை வாங்கிறு பாருங்கோ! அதுக்காக இந்த வருஷம் புதுஸா ஒரு பாட்டு கத்திக்கணும்னு நம்ம குட்டி ஆசைப்பட்டா. அவரை அழகா, கச்சிதமா ஒரு வர்ணம் பாடம் பண்ணிவைக்கச் சொன்னேன். அவ்வளவுதான். அவர்கிட்டே சிக்ஷைவெச்சிண்டா இருக்கிற சங்கீத ஞானமும் பறந்துபோயிடும் ஓய்!"

இரண்டாந்தாரம், மூன்றாம் தாரம் என்று கிழவனைக்கட்டிக்கொள்ள வேண்டுமா ? சாகும் வயதில் மணமகனாக ஆசைப்படும் கிழவர்கள் தான் இப்படி ஏழைகள் வீட்டில் பெண் பிறப்பதைப்பற்றிச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறார்களா? நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது ஏழை வீட்டுப்பெண்கள் இரண்டாந்தாரமாகவே வாழ்க்கைப்படுகிறார்கள். ஏதோ ஒன்றிருவர் சுகப்படுகிறார்கள். மற்றவர்களின் பரிதாப நிலையை யார் கவனிக்கிறார்கள்? நீங்கள் வரன் தேடும் வேலையை இனி மேல் விட்டுவிடலாம் என்று எத்தனையோ தடவைகளில் தன்பெற்றோர்களை மிகவும் ஆத்திரத்துடன் பயங்காட்டிக்கோபத்துடனும் கண்டித்திருந்தாள்.

ஆனால் பெண்ணைப்பெற்ற பெற்றோர்களா சும்மாவிருந்துவிடுவார்கள் ? “எந்தவரனாவது தங்கள் மகளுக்குப்பிடிக்காதா ? அவள் கல்யாணமும் முடிந்து கவலையற்று இருக்கமாட்டோமா” என்று மேலும் மேலும் வரன்களை அழைத்து வந்து பெண்ணைப்பார்க்கச் சொல்லிக்கொண்டேயிருந்தார்கள்.

சுந்தரியின் பிடிவாதத்தை சுப்பைய்யர் நன்கு அறிந்திருந்தார். அதனால் அவள் இஷ்டத்திற்கு மாறாக வலுக்கட்டாயப்படுத்தி அவளைக் “கிணற்றில்” பிடித்து தள்ள அவர் விரும்பவில்லை. “எப்படியாகிலும் ஒரு நாளைக்கு அவளுக்கு ஒருவரனாவது பிடிக்காமலா போகப்போகிறது. காரியமும் சுபமாக முடியாமலா இருந்துவிடப் போகிறது” என்று அவரும் நம்பிக்கைவைத்துக் காத்துக் கிடந்தார். சுந்தரியின் தாயும் சுப்பய்யரை நச்சரித்து மேலும் வரன் வேட்டைக்குக் கிளம்பவேண்டும் என்று தூண்டவில்லை. பாவம்! அவளும் அலுத்துப் போயிருந்தாள்.

மேலும் ஒரு வருஷகாலம் ஓடி மறைந்துவிட்டது.

மற்றுமொரு கல்யாணத்தரகர் சுப்பய்யர் வீட்டிற்கு வந்தார்.



“......ஏம்மா இந்த வருஷம் நம் மாத்திலே கொலு வைக்கலே?....”

“......தாத்தா செத்துபோயிட்டாரோல்லியோடி கண்ணு அதனாலே தான்......”

“......அப்படின்னா தாத்தாவுக்காகவா இவ்வளவு வருஷம் கொலு வெச்சிண்டிருந்தே? இம்மே எனக்காக கொலு வெய்யேம்மா!......”

எத்தனையோ வரன்களைப்பற்றிப் பிரஸ்தாபித்துச் சென்ற எத்தனையோ பேர்களில் அவரும் ஒருவர். ஏனோ இந்தத் தடவை அந்தத்தரகர் பிரஸ்தாபித்த இரண்டாந்தார வரன் சுப்பய்யருக்கும், அவர் மனைவிக்கும் பிடித்துப் போய்விட்டது. இந்த வரன் தட்டாமல் நிச்சயமாக முடிந்துவிடும் என்றுகூட எண்ணிவிட்டார்கள். அவ்வளவு தூரம் தரகர் வரனைப்பற்றி வர்ணித்திருந்தார்.

“சேலத்தில் ஒருவரன் இருக்கிறது.இரண்டாந்தாரந்தான்.வயது ஒன்றும் அதிகமில்லை இருபத்தேழுதான்ஆகிறது. முதல் மனைவி கல்யாணமான இரண்டு வருஷங்களுக்குப்பிறகு அதிகமான ஜுரத்தால் இறந்துபோய்விட்டாள். அவருக்கு வேறுயாரும் மனுஷாள் கிடையாது. தாயாரும் போய்விட்டாள். அவரும் நல்ல மாதிரி. இஷ்டமிருந்தால் முடித்துவிடலாம்” என்று தரகர் கூறிக்கொண்டு வருவதை அறையுள்ளிருந்து கேட்ட சுந்தரியே மயங்கிவிட்டாள் என்றால், பெண்ணுக்கு சீக்கிரம் விவாகமாக வேண்டுமென்று இத்தனை நாளும் துடியாய்த் துடித்து முயன்று வந்த பெற்றோர்கள் மயங்குவதற்குக்கேட்கவா வேண்டும்?

சுந்தரி இந்த் வரனைப்பற்றி ஒன்றும் ஆட்சேபனை சொல்லவில்லை. வயதும் அதிகமாகவில்லை. என்று அவளும் சம்மதித்திருந்தாள். கடந்து சென்ற காலம் அவள் மனதை மாற்றியிருந்தது.

சுந்தரிக்குமட்டும் உள்ளுக்குள் பயம்தான். “தரகர் பொய்யாக வர்ணித்திருப்பாரோ, வரப்போகிறவரும் இதுவரை வந்துவிட்டுப்போன கிழடு கட்டிய வரன்களைப்போல் இருந்துவிடுவாரோ” என்று நினைப்பெழும் போதெல்லாம், அவள் மனதில் விவரிக்கமுடியாத ஒரு திகில் உண்டாகும்.

நல்ல நாளும் வந்தது. தரகருடன் அந்த வரனும் பெண் பார்க்க வந்திருந்தார்.

வந்த மாப்பிள்ளையை நமஸ்காரம் செய்து எழுந்த-சுந்தரிக்கு அப்படியே இருதயம் நின்றுவிடும்போலிருந்தது.

மூர்ச்சித்து விழுந்து விடுவது போல் அவளுக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

அவள் மனதைக் கவர்ந்து, அவள் மனக் கோயிலிலேயே இருந்துவந்த ராமுவே இரண்டாந்தார மாப்பிள்ளையாக அவள் முன் தோற்றமளிக்கும்போது, சுந்தரிக்கு ஏன் தலை சுற்றாமலிருக்காது? எப்படியோ அவளும் சமாளித்துக்கொண்டாள்.

அவள் பிரார்த்தனை வீணாகவில்லை. அனுமானும் அவளைக் கைவிட்டுவிடவில்லை.

நாட்டாண்மைக்காரன்

கணேசன்

குடிகாரன் தெருவின் பெயர் மதுவிலக்கு வந்தபின் குடியானத்தெருவாகமாறியது. அந்தத்தெருவிலே சோர்வுகொண்டிருந்த பல குடும்பங்கள் தெம்புடன் விளங்க ஆரம்பித்தன. அவற்றுள் கண்ணாயிரத்தின் குடும்பமும் ஒன்று.

அவன் அந்தத்தெரு 'நாட்டாமை'காரன். நாட்டாமைக்காரரின் நியாயத்திற்குப் பெரும் மதிப்பு எந்த நாளிலும் இருந்தது. இப்போது அதன் மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. அவனிடம் மதிப்பு பெருகவே அவன் புகழும் காற்றோடு கலந்தது. அது சென்ற விடமெல்லாம் கண்ணாயிரம் போற்றப்பட்டான். நியாயம் தீர்ப்பதில் அவனுக்கு நிகரில்லை என்று பெயர்பெற்றான். பஞ்சாயத்து பேச வெளி ஊர்களிலிருந்தும் அவனுக்கு அழைப்பு வந்தது.

இருகட்சியாரும் மனமொப்பி ஏற்றுக்கொள்ளும்படி அவன் தீர்ப்பு அமையும். அதனால அவன் ஊர் பொது நிதிக்குப்பணமும் குவியும். இப்படி அவன் தன் கிராமத்தைச் செல்வம் நிறைந்ததாகச் செய்துவிட்டான். ஊராரும் அவனை கௌரவிக்க வேறுவழி தெரியாமல் அக்கிராமத்திற்கு அவன் பெயரைச் சூட்டிக் கௌரவித்தார்கள். ஆகவே அக்கிராமத்திற்கு கண்ணாயிரம் என்று பெயர் வந்தது.

கண்ணாயிரத்தில் செல்வம் நிறையவே கைத்தொழில்கள் பெருகின. விவசாயம் நாகரீக நலன்களை நடைமுறையில் கொண்டு அதிக தானியங்களை உற்பத்தி செய்து குவித்தது. இரப்பவர் அங்கு குறைந்தனர். இந்தியாவுக்கே அது ஒரு மாதிரி கிராமம் ஆகிவிட்டது.

ராட்டைகள் சுழன்றன. தறிகள் சப்தித்தன. உலைக்களங்களில் 'டங் டங்' என்றஓசை எழும்பியது. குழந்தைகளின் ஓட்ட ஆட்டங்கள் நிறைந்திருந்தன. இது தவிர வேறு சப்தமே கிடையாது. சண்டைச் சச்சரவு என்ற புலம்பல்களே கேட்டறியா சுவர்க பூமியாகியது அது.

இத்தனை பெருமை வாய்ந்த கண்ணாயிரத்தில்—ஏன் இதற்கெல்லாம் காரணமான கண்ணாயிரத்தின் வீட்டிலேயே—ஒரு பெருங் கூச்சல் கிளம்பியது "ஐயோ! இதென்ன அநியாயம்? இந்த வீட்டிலேயே அநியாயம் பிறக்குமானால் நியாயம் தேடி எங்கே போவது?'' என்று பலரிடமிருந்து வார்த்தைகள் வந்தன.

* * * * *

கண்ணாயிரம் வெகுநாள்வரை கல்யாணமே செய்துகொள்ளவில்லை. பெண்ணைப்பெற்றவர்கள் அவன் உறவுக்குக் காத்துக்கிடந்தார்கள். பெண்களோ அந்த பாக்கியம் யாருக்குக் கிடைக்கப் போகிறதோ என்று ஆவலோடிருந்தார்கள்.

கண்ணாவிரமோ இவர்கள் கவலையில் பங்கெடுத்துக் கொள்ளவே இல்லை. அவனுக்கு மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் தலைக்குமேல் வேலை இருந்தது. முக்கியமாக இந்தக்காரணத்ினால்தான் அவன் கல்யாணமேசெய்து கொள்ளவில்லை என்று எல்லோரும் நம்பினார்கள்.

ஆனால் உண்மைக்காரணம் வேறாக இருந்தது. அது ஒருநாள் அனலைக்கக்கி தன்னையும் தன் பெயரையுமே நாசமாக்கிவிடும் என்பதை அவனே உணரவில்லை. அந்தச் சம்பவம் மறந்துபோனதாகவே அவன் கருதிவிட்டான். அது மறந்துபோக வேண்டியதுதான் என்று பிடிவாதமாக மறதி என்னும் திரையிட்டு மூடினான். அச்சம்பவம் அத்திரையைக்கிழித்துக்கொண்டு வந்து விடும் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சகஜமாகவே தன் நாளை நல்ல பொழுதாகக் கழித்து வந்தான். அச்சம்பவம் அவனை நித்தியபிரமசாரியாக விரதம் பூணச்செய்தது. அதைத் தவிர அதனால் அவன் வேறு மாறுபாட்டை அடையவில்லை.

அவன் வாழ்நாளிலேயே அன்றுதான் அவன் புகழ் ஏணியின் உச்ச நிலையை அடைந்திருந்தான். அன்று மிகச்சிக்கலான ஒரு வழக்கில் பஞ்சாயத்துப்பேசிசமரசமாக முடித்துவைத்ததைக்கண்டு ஊரே மலைத்துவிட்டது.

அவ்வழக்கு சொத்து சம்பந்தமான வழக்கு. பங்காளிகள் இருவர் அநந்தர வாரிசுச் சொத்தான அதற்கு உரிமை கொண்டாடினர். இதற்காக அவர்கள் பிரவி கவுன்சில் வரைக்கூடப் போகத்தயாராய் இருந்தார்கள். அப்படிப்பட்ட வழக்கைத்தானாகவே அவர்களை அழைத்து ராஜியாகப் போகச்செய்தான். இதைக் கண்ட ஜனங்கள் அவனை தெய்வீக புருஷனென்றே பேசிக் கொண்டனர்.

அன்று இரவு நிறைந்த மனதுடன் கண்ணாயிரம் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். திடீரெனக் கதவு இடிக்கும் சப்தம் கேட்டு விழித்துக்கொண்டான். ஒரு வண்டி யாரையோ இறக்கி விட்டு விட்டுத் திரும்பிப்போகும் சப்தம் அவன் காதில் விழுந்தது. எழுந்து கதவைத் திறந்தான் வெளியில் ஒரு பெண்ணும் ஆணும் ஒரு சிறு குழந்தையுடன்

நின்றிருந்தனர். அவர்களைக் கண்டவுடன் அவன் முகம் சிவந்தது. கண் அனலைக் கக்கிற்று, இதையெல்லாம் மங்கிய விளக்கொளியில் வந்த தம்பதிகள் கவனிக்கவில்லை. உள்ளே சென்று தங்கள் அலுப்புத்தீர படுத்தால் போதும் என்ற நோக்குடன் உள்ளே நுழைந்தனர். அந்தப் பெண்மட்டும் 'அத்தான் சுகந்தானா?' என்று வாய் வார்த்தையாய்க் கேட்டுவிட்டு உள்ளேசெல்லும் தன் கணவனைப் பின் தொடர்ந்தாள்.

சீற்றத்துடன் நின்ற கண்ணாயிரத்திற்கு நிகழ்ந்த சம்பவங்கள் கண்முன்வந்து ஓடி மறைந்தன.

* * * *

காத்தாயி அவன் மாமன் மகள். சிறுவயது முதற்கொண்டே இருவரும் நெருங்கிப்பழக சந்தர்ப்பம் அவர்களுக்கு இருந்தது. காத்தாயி அவனை விளையாட்டுத் தோழன் என்ற முறையில் அவனுடன் பழகினாள். கண்ணாயிரமோ முறைக்காரன் என்ற உரிமையோடு எப்போதும் அவளை அதிகாரம் செய்தான். இதைக்கண்ட காத்தாயி அவனை முரடன் என்று எண்ண ஆரம்பித்தாள். அவன் உள்ளத்தில் வழிந்தோடிய அன்பை அவன் வெளித்தோற்றம் ஒரு சந்தர்ப்பத்தில்கூட வெளியாக்கவில்லை.

ஒருநாள் விளையாட்டில் சண்டை வந்துவிட்டது. காத்தாயி ஆத்திரமாக "இனிமேல் நான் உன்னோடு விளையாடவே வரமாட்டேன். உன்னோடு பேசக் கூட மாட்டேன். 'டு' போ" என்று சொல்லிவிட்டாள்.

"பேசாவிட்டால் போயேன். யாருக்கு நஷ்டம்? நாளைக்கு உன்னை எனக்குக் கட்டிக்கொடுத் தப்புறம் தன்னாலே நாய்மாதிரி பேசவருகிறாய்!" என்றான் அவன் பதிலுக்கு.

"வருவேன். வருவேன். உன்னைக் கட்டிக்கொண்டால்தானே?"

"உம். அத்தானை கட்டிக் கொள்ளாமல் வேறுயாரைக் கட்டிக்கப் போகிறாயாம்?"

"கங்கா சலத்தை" என்று உறுதியாகப் பதில் சொன்னாள் காத்தாயி. அந்த இளம் வயதில் அந்த இளம் மனதில்—இத்தனை அழுத்தமான திர்மானம் இருப்பதைக் கேட்டு அவன் மனம் துணுக்குற்றது. பொறுமைத்தீ அவனைப் பேச விடவில்லை. "உம் அதைத்தான் பார்த்து விடுவோமே" என்று கத்திக் கொண்டே அவளை நாலு அறை அறைந்தான். ஆண்களுக்குப் பேச்சிலே பலம் குறைவுதான். இல்லாவிட்டால் கையிலே அத்தனை உறுதி எங்கிருந்து வரும்?

காத்தாயியின் கன்னம் சிவந்தது: ஐந்து விரல்களும் பதிந்திருந்தன. கண்கள் நீரைக் கக்கின. 'ஓ'வென அலற ஆரம்பித்தாள். 'நிச்சயம் கண்ணாயிரம் முரடன் அவனைக் கட்டிக் கொள்ளக் கூடாது' என்று அவள் மனம் தன் எண்ணத்தை உறுதிப்படுத்திக் கொண்டது.

அச்சம்பவம் அத்துடன் போகவில்லை. தொடர்ந்தது. அப்போது கங்காசலம் அவ்வழியே வந்தான். கண்ணாயிரத்தின் செய்கை அவனுக்கு ஆத்திரமூட்டியது. தன் கைப் பொருள் நஷ்டப்பட்டது போல் அவன் உணர்ந்தான். கண்ணாயிரத்தின் முன் குடுமியைப் பிடித்துக் கொண்டு அவனை அடியும் உதையும் குத்துமாகப் பிய்த்துவிட்டான். பெரியவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்ட சிறுவன் போல் எதிர்த்துப் போராடாது அத்தனை உதையும் வாங்கிக் கொண்டான் கண்ணாயிரம். ஏனெனில் அவன் தன் தவறை உணர ஆரம்பித்த நேரம் அது.

இத்தனை ரகளையையும் பெரியவர்கள் யாரும் கவனிக்கவில்லை. இல்லாவிட்டால் அச்சம்பவம் நிகழ்ந்து அவன் மனதில் ஒரு வடுவேற்பட்டிருக்காது. அன்று வைராக்கியமாய்ப்பேசாது இருந்துவிட்டவர்கள் அதை மறந்து பின்னால் பழகியிருப்பார்கள். அதற்கு வாய்ப்பு இல்லாமல் கண்ணாயிரத்தின் குடும்பம் அவ்வூரைவிட்டு வெளியேற நேர்ந்தது.

கண்ணாயிரத்தின் குடும்பம் அவ்வூரை விட்டுக் கிளம்பியது கங்காசலத்தின் குடும்பத்தால் தான். ஏனெனில் கங்காசலத்தின் தகப்பனாரிடம் அடமானமாக வைத்திருந்த சொத்து கடன் அடைபடாமல் அவரிடமே போய் விட்டது. கண்ணாயிரத்தின் தகப்பனார் பிழைப்புத்தேடிக் கிளம்பினார் 'கண்ணாயிரத்தில்' (அப்போது அதற்கு என்ன பேரோ) குத்தகைக்கு நிலம் பயிரிட்டு கொஞ்சங் கொஞ்சமாகக் காலூன்ற ஆரம்பித்தார். அந்த வழியிலேயே தொடர்ந்து கண்ணாயிரம் சீரும் சிறப்பும் பெற முடிந்தது.

கங்காசலம் சொத்தை அடைந்தது மல்லாமல் காத்தாயியையும் அடைந்து விட்டான். இதற்குக் கண்ணாயிரத்தின் அப்போதைய வறுமை நிலைதான் காரணம் அப்படியாவது கங்காசலம் சுகப்பட்டானா! தகப்பனுடன் சண்டை போட்டுக் கொண்டு வடநாட்டுக்குப் பிழைக்கப் போனான். போன இடத்திலும் இல்லாத அவதியெல்



லாம்பட்டான். அந்தச் சமயத்தில் தான் காத்தாயி ஒரு பெண்ணைப் பெற்றாள். அதனால் அவள் 'கிடந்தகிடை' பட்ட அவஸ்தை சொல்லி முடியாது, எப்படியோ ஒருவாறு தேறி எழுந்தாள். அத்துடன் கஷ்டம் ஓயவில்லை. நாட்டுப் பிரிவினை அவர்களை உட்கார விடாது ஓட்டியது. இந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் கண்ணாயிரத்துக்குத் தெரியவந்தது. அவன் கண்கள் கலங்கின. காத்தாயியின்மேல் அவனுக்கு அளவுக்கடந்த காதல். அவளிடம் சிறுவயதில் 'ஏதோ அசட்டு கௌரவமும் அதிகாரமும் பாராட்டித்' தவறாக நடந்து கொண்டாலும் அது அவன் அன்பின் குறைவை உணர்த்தவில்லை. அவள் சுகப்படவேதான் அவன் வாழ நினைத்தான். ஓரோர் சமயம்' கங்காசலத்தை அவள் விரும்பினால் என்ன? எப்படியாவது அவள் சுகமாக இருந்தால் சரி என்று சற்று இரக்கப்படுவான். ஆனால் கங்காசலத்தை நினைக்கும்

போதோ அவன் கோபம் எல்லை கடந்துவிடும். தன்னைக் கெடுத்து 'ஓடுகாலி'யாகி காத்தாயியின் வாழ்க்கையையே பாழ் பாதையில் கொண்டு விட்டானே என்று கோபம் பொங்கும். அவன் இரத்தம் கொதிக்கும். எதிரிலிருந்தால் கொன்றுவிடலாமா என்றுதோன்றும். அது விஷயத்தில் ஏனோ அவன்மனது நியாயப் பாதையை விட்டு விலக்கிப் போகவே திட்டம் போட்டுக் கொண்டிருந்ததெனலாம். இதுபற்றியேதான் அறிஞர்கள் கொலைக் குற்றத்தை ஒரு வியாதி என்கிறார்களோ? இந்தமனக்காட்சிகள் ஓடி ஒளிந்தபின் கதவை சாத்திக் கொண்டு கண்ணாயிரம் உள்ளே போனான் வந்தவர்கள் நிம்மதியாகத்தூங்கிக்கொண்டிருந்தனர். குழந்தையும் அயர்ந்திருந்தது. அடித்துப் போட்ட எலும்புக்கூடுகள் போலிருந்தனர். அவர்கள் காத்தாயியும் கங்காசலமுமே.



வந்தவர்கள் ஒன்றும் சாப்பிடாமல் ஒன்றும் பேசாமல் படுத்து உறங்கிவிட்டதை அவன் யோசிக்கவே இல்லை. சென்றதை மறந்து வெகுளியாக அவர்கள் வந்திருப்பதை அவன் நினைக்கவே இல்லை. எத்தனை தூரம் நடந்தார்களோ? எத்தனைநாள் பட்டினியோ? இப்படி அலுப்பாற...நிர்பயமாய் படுத்துவிட்டார்களே...என்பது போன்ற இரக்கச்சித்தமே அவனுக்கு உண்டாகவில்லை. பேய்ச் செடிகளுக்குச் செழிப்பூட்டும் பாலைவனமாக இருந்தது அவன் மனம் அப்போது. அவன் மன மூலையிலே அடங்கி அழிந்து கிடந்த ஒரு கோரசக்தி அவனை எதையும் யோசிக்கவிடவில்லை. காத்தாயியின் கஷ்டமே அவன் மனக்கண்முன் வந்தது. அதற்குக் காரணகர்த்தாவான கங்காசலத்தின்மேல் அது கோபத்தைக் கக்கச் செய்தது. அன்று தன் முன் குடுமியைப் பிடித்துக் கொண்டு அறைந்தது அவனுக்கு நினைவு வந்தது, பிறருக்கு ராஜி பேசி சாதுர்யமாகப் பண்பட்ட அவன் மனம் இப்போது செத்து விட்டதோ?

அவன் கூரிய கட்டாரியை எடுத்தான் கங்காசலத்தின்மீது பாய்ச்சினான். அவன் மனம் மயக்கம் தெளிந்து சற்று உயிர்பெற்று ஏதோ சொல்லியதோ? அடுத்த குத்து காத்தாயியின் மார்பில் பாய்ந்தது. அங்கே நிசப்தத்தில் இரண்டு கடைசி மூச்சுகள் வெளிப்போயின. ஓடும் ரத்தத்தில் குழந்தை மிதந்தது.

சிறிதுநேரத்தில் கண்ணாயிரம் பூரண உணர்வு பெற்றுவிட்டான். தன் செயலை அவனை ஊரார் புகழும் குணத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தான். அவன் தேகம் அவமானத்தால் குன்றியது.

சிறிதுநேரத்தில் ஒரு பயங்கர முனகல் சப்தம் கேட்டது. கோழிகள்கூவ ஆரம்பித்தன. காகங்கள் கரைய ஆரம்பித்தன. ரத்த வெள்ளத்தில் மிதந்த குழந்தையும் தீனக்குரல் காட்டிற்று.

அந்தக் காலைநேரத்திலே ஒரு வழக்கில் தீர்ப்பு வேண்டி சிலர் அங்குவந்து 'நியாயாவதி'யைக் காண ஆவலுடனிருந்தனர். நேரம் செல்லச் செல்லக் கதவு திறக்கப்படாதது கண்டு அவர்கள் ஊராரைக் கூட்டிவந்தனர். கதவை உடைத்துப் பார்த்தவுடன் அவர்கள் கண்ட காட்சி பலரை மூர்ச்சை அடையச்செய்து விட்டது. கண்ணாயிரம் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தான். தோய்ந்த இரத்தத்தில் இரண்டு உடல்கள் கிடந்தன. அசையமுடியாது மிரள மிரள விழித்துக்கொண்டு கிடந்தது குழந்தை.

இக்கோரக் காட்சியைக் கண்ட ஜனங்கள் "இதென்ன அநியாயம்! இந்த வீட்டிலேயே அநியாயம் பிறக்குமானால் நியாயம் தேடி எங்கேபோவது?" என்று சொல்லிக்கொண்டனர்.

பதில் பேச ஆளில்லை. அங்கே நியாயம் செத்துக்கிடந்தது!

கதலீபுர நாடகம்



எஸ். ஜே.

அத்தியாயம் 2

சேகரன் வந்தபிறகு மங்களம் ஸ்டோர்ஸில் வேலை பார்த்து வந்த குமாஸ்தாவை அதிகப்படியாக எண்ணினார் நடேசய்யர். ஆகவே அவனுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளப் பாக்கியைக் கொடுத்து அவனை வீட்டுக்கு அனுப்பினார். கலாசாலை நேரம் போக, மற்ற சமயங்களில் சேகரன் கடையில் கணக்கெழுத வேண்டியது. அவன் இல்லாத சமயங்களில் தானே கடையைப் பார்த்துக்கொள்ள வேண்டியது. சேகரன் பி. ஏ. கடையில் கணக்கெழுதுவது என்றால் அது அவனுக்குக் கௌரவமாகப் படவில்லை. ஆனால் ஒரு சாண் வயிற்றுக்காக எல்லாவற்றையும் செய்ய வேண்டியிருந்தது. வெகு சீக்கிரத்தில் மாமா சேகரன் கடையில் உட்காரக்கூட லாயக்கில்லை என்று கண்டுபிடித்தார். எங்கெந்த சாமான்கள் இருக்கின்றன என்று சொல்ல வேண்டும்; எவை இல்லை என்று மழுப்ப வேண்டும் என்றெல்லாம் அவனுக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் மாமா கடையில் இருக்கும்போதே, ஒரு பையன் சேகரனிடம் "ஹார்லிக்ஸ் இருக்கிறதா?" என்று கேட்டான். "இருக்கிறது, தம்பி! எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டான் சேகரன். மாமா சேகரனை விழித்து விழித்துப் பார்த்தார். என்னென்னமோ ஜாடைகாட்டினார். சேகரன் அதையெல்லாம் கவனிக்கவேயில்லை.

"ஏண்டா! இதுதான் நீ கடையைக் கவனிக்கிற அழகோ? ஹார்லிக்ஸ் சரக்கு வந்து ஒரு வருஷத்துக்கு மேலாச்சே! அது இருக்குன்னு உளறுகிறாயே! நீ எதுக்கு லாயக்கு சொல்லு, பார்ப்போம்!"

"யாரு? நானா உளறுகிறேன்? நேத்திக்குப் பார்த்தேன் மாமா! இன்னும் ஒரு குரோஸ் இருக்கு. உங்களுக்குத்தான் மறந்துவிட்டது போல இருக்கு" என்றான் சேகரன்.

"தம்பி! ஹார்லிக்ஸ் இல்லை. வந்தவுடனே தருகிறேன், நீ போ!" என்று சொல்லி அந்தப் பையனை அனுப்பிவிட்டு நடேசய்யர் சேகரனை எரித்துவிடுவதுபோலப் பார்த்தார்.

"ஏண்டா, படித்திருக்கிறாயே! உனக்கு மூளை ஏதாவது இருக்கா? ஒரு மனுஷன் எவ்வளவு சைகை காட்டறது, எவ்வளவு மறைமுகமாகச் சொல்றது? இப்படிக் கேட்டவருக்கெல்லாம் கொடுத்திண்டிருந்தா நாளைக்கு நானும் தெருவிலே கிளம்ப வேண்டியதுதான்!" என்று எரிந்து விழுந்தார் நடேசய்யர்.

மற்றொரு நாள் ஒரு பிரபல கம்பெனியின் சாக்லெட் வந்து வாங்குவாரில்லாமல் குவிந்து கிடந்தது. அப்போது யாரோ சேகரனிடம் சாக்லெட் இருக்கிறதா என்று விசாரித்தான்.

"சாக்லெட்டா? சரக்கு வந்து ஒரு வருஷம் ஆச்சு, ஸார்!', வந்தவுடனே தருகிறேன்" என்றான் சேகரன், வீம்புக்காக.

"ஸார் என்ன கேட்கிறார்? சாக்லேட்டா? எவ்வளவு பவுண்டு ஸார் வேணும்? அவன் ஹார்லிக்

ஸை நினைச்சுண்டு பதில் சொல்றான் மடையன்!'' என்று சொல்லிவிட்டு மாமாவே அந்த வாடிக்கையைக் கவனித்துக்கொண்டார்.

''இதோபார்! சேகரா! தர்மம், நியாயம் என்பதெல்லாம் தனி, வியாபாரம் என்கிறது தனி. தெரியுமா உனக்கு?''

''தெரியும், தெரியும்! பகவத் கீதையில் பகவான் சொல்லியிருக்கிறார்'' என்று முணுமுணுத்தான் சேகரன்.

''கொஞ்சநாள் நீ கடையில் சும்மாவே உட்கார்ந்திரு. வியாபார ரகசியமெல்லாம் தானாகவே தெரியும். கொஞ்ச பழக்கம்வேண்டும்'' என்று புத்திமதி சொன்னார் நடேசய்யர். அவருடைய 'புத்திமதி'களை சிரமேற்கொண்டு அப்படியே நடப்பதாக வாக்குறுதியளித்தான் சேகரன்.

* * * *

சந்திரசேகரன் 'மர்ச்சண்ட் ஆப் வெனிஸ்' படித்துக்கொண்டிருந்தான். ஷேக்ஸ்பியரின் கிராஷியானோ என்ற பாத்திரம் சங்கீதத்தின் மேன்மையைப்பற்றித் தன் காதலி ஜெஸிகாவிடம் சொல்லிக்கொண்டிருக்கிறான். கூடத்திலிருந்து அவ சப்தங்கள் கேட்டன. ''ஸா-நீ-தா-பா-'' என்று ஸப்தஸ்வரங்களும் தூக்கி விடப்படுவதுபோல ஒரு குரல் (பல குரல்களைப்போலத் தோன்றினாலும் அது ஒரு குரல் தான்!)சப்தம் உண்டாக்கியது. சேகரன் ஷேக்ஸ்பியரை மனதிற்குள் திட்டினான். ''ஷேக்ஸ்பியர் மங்களத்தின் பாட்டைக்கேட்டிருந்தால் கிராஷியானோவைச் சங்கீதத்தின் திக்குக்கே ஒரு கும்பிடு போடும்படி செய்திருப்பார்'' என்று எண்ணிக்கொண்டான்.

''வாத்தியாரே! இதுவரைக்கும் எத்தனை கீர்த்தனை ஆயிருக்கு?'' என்று கேட்டது ஒரு குரல்.

''இருபது கீர்த்தனை முடிச்சிருக்கேன்...'' என்று கூறிற்று ஒரு நடுங்கும் குரல்.

''ஆறு மாஸமா இவ்வளவுதான் ஆயிருக்கா? பேஷாயிருக்கு நீர் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிற அழகு!''

''பாட்டுச் சொல்லிக் கொடுத்தது எல்லாம் சரியாய்த்தானிருக்கு! குழந்தைக்குப் பாடமாக மாட்டேன் என்கிறது. இன்னும் கொஞ்ச நாளிலே சரியாய்ப் போய்விடும்!'' என்று மேற்படி நடுங்கும் குரல் பிரதிவாதம் செய்தது.

''அதென்னவோ! மாசம் முப்பது ரூபாய் அழுகிறேன். கொடுக்கிற காசுக்கு ஒழுங்கா சொல்லிக்கொடும். அந்தப் பிராமணனு ரேடியோக் கச்சேரி, ரேடியோக் கச்சேரின்னு பிராணனை விடறார்!''

அடுத்த நிமிஷம் ரேழி வாசற்படியில் பொடி உறிஞ்சும் சப்தம். அதற்கு அடுத்த நிமிஷம் முதுகில் தைத்த ஒரு சட்டை, அதன் மேல் தெரியும் நரைத்த தலை, கிழிசல் தெரியாமல் இருப்பதற்காக விசிறி மடிப்பாகச் செய்யப்பட்ட அங்கவஸ்திரம் இவற்றோடு ஒரு பிராணி சேகரன் உட்கார்ந்திருந்த ரூமின் ஜன்னலுக்கு நேராகச் சென்றது. ''பாவம்! மனுஷன் தெரியாமல் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டான். மடாத் தவளைகள் நாலைந்தைச் சேர்த்துக்கொண்டால்கூட ஏதாவது சங்கீதம் சொல்லிக் கொடுக்கலாம். இல்லாவிட்டால் சங்கீதத் தொழிலுக்கே நமஸ்காரம் செய்து விட்டு ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை வைக்கலாம். அதுவும் இல்லாவிட்டால் 'மாதம் ஒரு பத்திரிகை ஒன்றுக்கு ஆசிரியராகலாம், அல்லது....

சேகரனுடைய எண்ண வரிசைகளை, ''அத்தான்! அத்தான்!'' என்ற கூக்குரல் துண்டித்தது. மங்களம் அருமையாக அத்தானை அழைத்துக்கொண்டே வந்தாள்.

''ஒரு புதுப்பாட்டுச் சொல்லிண்டிருக்கேன்' ரேடியோ சான்ஸ் வந்தால் அதைப் பாடப் போகிறேன். ஆனால் ஸ்வரம்தான் நெட்டுருவாக மாட்டேன் என்கிறது! பாடறேன். கேட்கிறாயா?''

''இப்பொழுதேயா?''—என்றான் சேகரன். இவ்வளவு சீக்கிரத்தில் அந்த விபத்தை அவன் எதிர்பார்க்கவில்லை.

''இப்பொழுதே! இங்கேயே!'' என்று உற்சாகத்துடன் சொன்னாள் மங்களம்.

''கிருபயா பாலய சௌரே!'' என்று ஆரம்பித்தாள்.

சேகரன் மிகவும் பரிதாபகரமாக உச்சிமோட்டையும், சுவர்களையும் பார்த்துக்கொண்டே ரஸிப்பவன்போலத் தலையை ஆட்டிக்கொண்டிருந்தான். பாட்டு முடிந்த பிறகு, ''ரொம்ப அர்த்த புஷ்டியுடன் இருக்கிறது!'' என்றான்.

''ரொம்ப...எப்படியிருக்கு?'' என்று கவலையோடு விசாரித்தாள் மங்களம். ''அர்த்த புஷ்டி. அதாவது நல்ல கருத்தோடு இருக்கு என்றேன்!''

மங்களம் ஏமாற்றத்தில் உதட்டைப் பிதுக்கினாள். ''அதைக் கேட்கவில்லை. பாட்டு எப்படியிருந்தது?''

''பாட்டுத்தானே? ரொம்ப பேஷாயிருந்தது. ஆனால் ரேடியோவில் பாடும்போது, வேறு ஏதாவது பாட்டைப்பாடு......'' என்றான் சேகரன்.

"அது கிடக்கட்டும், மோகனத்திலே ஒரு உருப்படி பாடறேன். கேள்!" என்று தொண்டையைக் கனைத்துக்கொண்டாள்.

சேகரனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இந்த இசை வெள்ளத்திலிருந்து தப்பிப்பது எப்படி என்று பார்த்தான். ஒரு வழியும் காணவில்லை!

"ஐயா!.........ஐயா!" என்று வாசலில் ஒரு குரல் கேட்டது.

"என்னை யாரோ கூப்பிடறு. மங்களம்!"

"உன்னை இல்லை. நீ பாட்டைக்கேளு!"

"இல்லை! என்னைத்தான்!" என்று சொல்லிவிட்டு சேகரன் வாசலில் போய்ப்பார்த்தான்.

"ஐயாவுக்கு எங்கேயோ வெளியில் போகணுமாம், உங்களைக் கடையைப் பாத்துக்கச் சொன்னுங்க!" என்று சொல்லிவிட்டுப் போனுன் கடைப் பையன்.

"மங்களம்! அப்பா கூப்பிட்டாரம், கடைக்குப் போய்ட்டு வரேன்!"

"அப்பாவுக்கு வேறே வேலையென்ன? யாராவது ஸ்வாரஸ்யமா என் பாட்டைக்கேட்டுண்டிருந்தா அதைக் கெடுக்கிறது தான் வேலை. அத்தான்! இன்னிக்கு சாயங்காலம் உனக்குப் பாடிக் காட்டறேன். உனக்குப் பாட்டை விட்டுட்டுப் போகவே மனசில்லை, பாவம்!"

'ஆமாம், ஆமாம்!' என்று சொல்லிக்கொண்டே வெளியே கிளம்பினுன் சேகரன்.

மாமாவிடம் அவனையும் மீறி அவனுக்கு நன்றியறிதல் ஏற்பட்டது. அவனுடைய அந்தராத்மா அன்றைக்குமட்டும் சாயங்காலமே வரக்கூடாது என்று வேண்டிக்கொண்டது.

"மங்களத்துக்கு ஒரு ஜாதகம் வந்திருக்கு. ஜோசியரைப் போய்ப் பார்த்திட்டு வரேன். அதுவரைக்கும் கடையைப் பார்த்திண்டிரு. அசிரத்தையா இருக்காதே!" என்று சொல்லிவிட்டு நடேசய்யர் சகுனம் பார்த்துவிட்டுப் புறப்பட்டார்.

சந்திரசேகரனுடைய மனது மங்களத்தினிடம் அகப்பட்டுக்கொள்ளப்போகும் அப்பாவியைப்பற்றி எண்ணி இரங்கியது.

அத்தியாயம் 3

கதலிபுரம் ஸ்டேஷனில் ரயில் வண்டி வந்து நின்றது. அந்த ஊரில் சாதாரணமாக ஒருவரும் இறங்குவது கிடையாது. அப்படி யாராவது இறங்கினுல் போர்ட்டர் என்ன, டிக்கட் செக்கர் என்ன, ஸ்டேஷன் மாஸ்டர் என்ன இவர்கள் அத்தனை பேரும் அவரை சந்தேகத்துடன் பார்த்துத் தங்களுக்குள் கசமுசவென்று பேசிக்கொள்ளுவார்கள். அப்படியிருக்கும் போது இரண்டாம வகுப்பு வண்டியில் ஒருவர், பார்வைக்கு ஆஜானுபாகுவாய் பெரிய மனிதர் போலத் தோற்றமளிப்பவர், வந்து இறங்கினுல் அவர்களுக்கு எப்படியிருக்கும்? அந்தப் பெரிய மனிதரோடு கூட ஓர் அழகான யுவதி, ஒரு விஷமக்கொடுக்குச் சிறுவன், ஒரு கிழவி, ஒரு வேலைக்காரன், நாடகத்தில் ராஜபார்ட் போல்தலைவைத்துக் கொண்டு ஜிப்பா போட்



டுக்கொண்டிருந்த ஒரு ஆசாமி இத்தனைபேர்கள் இறங்கினார்கள்.

"பெரிய டிரங்குப் பெட்டியும், ஹோல்டாலும் வந்துடுத்தா இல்லே?" என்று வேலைக்காரனை விசாரித்தார் பெரிய மனிதர்.

"வந்துடுத்துங்க!" என்று சொல்லிக்கொண்டே ஒரு டின் பக்கமாய் ஒதுங்கினான் வேலைக்காரன்.

"ஐயோ! அது மேலே படாதே! டின்லே அப்பளாம் வெச்சிருக்கேன்! அத்தனையும் சேஷமாய் விடும்..." என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளாமல், ஆனால் கதறும் குரலில், கூவினாள் கிழவி.

"அப்பா!...செவிட்டு அப்பா!...உன்னைத் தானே?" என்று பெரிய மனிதரின் சட்டை நுனியை விஷமக் கொடுக்கு இழுத்துக் கொண்டே, "அப்பா! நம்ப தமனப்பூரிலே ஒரு நாளைக்குக் கடைத் தெருவுக்குப் போனோமொன்னே அன்னிக்குக்கூடக் காலம்பற உனக்குத் தேனு கொட்டித்தே..." என்று ஆரம்பித்தான்.

'அதுக்கென்னடா இப்போ?'

"அன்னிக்குக் கடைத் தெரு விலேகூட பத்தணா கொடுத்து ஒரு ஊதல் வாங்கித் தந்தயோன்னே. நீகூட வாங்கித்தர மாட்டேன்னே, நான் 'ஓ'ன்னு அழுதேனே..."

"ஆமாம்! இப்போ என்ன வந்துடுத்து!"

"அந்த ஊதலை வந்து அப்பா ரயில்லேயே போட்டுட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே பையன் ரயில் போன திக்கைப் பார்த்தான். அது அவுட்டரைத் தாண்டிப் போய் விட்டது.

"அதானேடா! இன்னொரு ஊதல் வாங்கித்தரேன்!...எலே கட்டையா! கூட்ஸ் ஷெட்டிலே நாம்ப கூட்ஸ்மூலமா அனுப்பிச்ச சாமானெல்லாம் வந்து இறங்கியிருக்கும். எல்லாத்தையும் ஒரு கட்டை வண்டியிலே போட்டுண்டு வந்து சேரு!" என்று சொல்லிவிட்டுக் குடும்ப சகிதமாய் அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டார்.

ராவ்பஹதூர் பயங்கர நரஸிம்மம் ரிடையர் ஆன போலீஸ் ஸார்ஜெண்ட் தமனபூர் ஸ்டேட் போலீஸில் முப்பது வருஷகாலம் போலீஸ் கிளார்க் வேலையிலிருந்து ஸார்ஜெண்ட் வரைக்கும் பார்த்துவிட்டார். அவர் தம்முடைய சட்டைகளுக்கும், கோட்டுகளுக்கும் பை பெரிதாக வைத்துக்கொள்வதைப்பற்றி தமனபூர் ஸ்டேட்டில் பல வதந்திகள் உலாவின. அவருடைய சம்பாத்தியத்தையும், செலவையும் கணக்கெடுத்துப்பார்த்தால் சாதாரணமாக ஒரு லகாரத்துக்குமேல் மிஞ்சக்காரணமில்லை என்று தெரியும். ஆனால் அவருடைய கணக்கில் ரத்ன ஸாகரா பாங்கில் முப்பதினாயிரம், பஞ்சு அண்ட் கோவில் இரண்டு லக்ஷம்ரூபாய் பங்கு, நில புலன்களில் ஒரு லக்ஷம், பங்களாவில் போட்டது ஐம்பதினாயிரம் என்று இருந்தது. தர்ம சாஸ்திரப்படி நடந்திருந்தால் இவையெல்லாம் பகற்கனவாக இருந்திருக்குமாதலால் அவர் உத்யோகத்தில் இருந்தவரைக்கும் தர்மம், சத்தியம் இவற்றையெல்லாம் பத்திரமாய் மூட்டை கட்டி வைத்திருந்தார் என்றும், ரிடையர் ஆன பிறகு அவற்றைக் கடைப்பிடிக்கலாம் என்று எண்ணியிருந்தார் என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது.

பயங்கர நரஸிம்மம் பெயருக்குத் தகுந்தாற்போல் ஆறடி உயரமான சரீரம், கோபாக்னி ததும்பும் முகம், கருணையற்ற கண்கள் இவற்றோடு விளங்கினார். அவருக்கு ஒரு பெண், இரண்டு பிள்ளைகள், மூத்த பிள்ளை சென்னையில் இண்டர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். இரண்டாவது பதினாறு வயது நிறைந்த பெண். தந்தையின் சாயல் கொஞ்சங்கூட இல்லாமல் இனிமை ததும்பும் சுபாவம். அன்பும் கருணையும் ததும்பும் பார்வை, சிவந்த கொடி போன்ற சரீரம்—மொத்தத்தில் ஒரு நவீனத்தின் கதாநாயகிக்கு இருக்கவேண்டிய லட்சணங்களில் ஒன்றும் குறையாமல் இருந்தாள். மூன்றாவதும் கடைசியுமான புத்திரனை சின்ன பயங்கரம் என்று சொல்லலாம். (வேலைக்காரனும் சமையற்காரனும் அவனுக்கு வைத்த பெயர் இது.) அவன் உருவத்திலும், சுபாவத்திலும் பெரியவருடைய அவதாரம் தான் என்று அவனுடைய பாட்டி ஸர்டிபிகேட் கொடுத்திருந்தாள்.

ரிடையர் ஆனபிறகு நிம்மதியாக வாழ்க்கை நடத்தக் கதலீபுரம்தான் ஏற்றது என்று பயங்கர நரஸிம்மம் அவர்கள் எண்ணியதால் அங்கே ஒரு பங்களாவையும் நிலபுலன்களையும், வாங்கிக் கொண்டார். பட்டண வாசத்தில் இருந்தால் எவனாவது பயங்கரத்தின் செல்வநிலைமைபற்றி ஏதாவது வம்பளப்பான் என்று அவர் பயந்தார். கதலீபுரத்தைப்போன்ற கிராமாந்தரத்தில் இருந்தால் அப்பாவிகளான கிராமவாசிகள் "பெரிய வேலையிலிருந்து ரிடையர் ஆகி நிறையப்பணத்துடன் வந்திருக்கும் பெரிய மனுஷன்" என்று எண்ணுவார்களேயொழிய அவருக்குச் செல்வம் சேர்ந்த விதத்தைப்பற்றிக் கட்டுக்கதைகளைக் கிளப்பமாட்டார்கள்.

கதலீபுரம் ஒரு சிறிய கிராமம். அந்த ஊருக்கு முக்கியத்வம் ஏதாவது இருந்தால் அதற்குக் காரணம் அந்த ஊர் வழியாக தென்னிந்திய ரயில்பாதை செல்லுவதாகும். செம்மண் பூமி, தென்னைமரத்தைவிடப் பனைமரங்களைத்தான் அதிகமாகக்காணலாம். ஊருக்கருகே ஒரு காட்டாறு ஓடிற்று. அதில் எப்



போது கடைசித் தடவையாகத் தண்ணீர் வந்தது என்று அந்த ஊரிலுள்ள கிழவர்களுக்குக் கூடத் தெரியாது. அந்த ஊர்க்காரர்கள் சர்க்காரோடு வலுவாகச் சண்டைக்கு நின்றதன் பேரில் அந்த ஊருக்காக ஒரு போஸ்டாபீஸ் ஏற்படுத்தப்பட்டது. ஒரு ஜில்லா போர்டு எலிமெண்டரி பள்ளிக்கூடம் ஊருக்கு மற்றொரு அலங்காரமாக விளங்கிற்று. எந்த விதமான மனுஷ்ய யத்னமும் இல்லாமல் ஊரெங்கும் காட்டாமணி, கள்ளி போன்ற தாவர வர்க்கங்கள் செம்மையாக வளர்ந்திருந்தன. அந்த ஊர்க்காரர்கள் சாமான்கள் வாங்கவேண்டுமானால் இரண்டு மைல் மேற்கேயுள்ள மேலாபுரத்துக்குப் போகவேண்டும். மேலாபுரத்தில் ஒரு பஞ்சாயத்து போர்டு ஆஸ்பத்திரி, ஏழெட்டு ஷாப்புகள், ஒரு சந்தைக்கடை, இன்னும் ஒரு பஞ்சாயத்துபோர்டு மானேஜ்மெண்டில் இருக்கும் பெரிய ஊருக்கு என்னென்ன தேவையோ அவையெல்லாம் அங்கே இருந்தன. கதலீபுர வாசிகள் ஒரு விஷயத்தில்மட்டும் மேலாபுர வாசிகளிடம் பெருமை கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அது என்னவென்றால் மேலாபுர வாசிகள் ரயிலைக் கண்ணால் பார்க்கவேண்டுமென்றால் கதலீபுரத்தின் எல்லைக்குத்தான் வரவேண்டும். ரயிலிலேயே ஏறவேண்டுமென்றால் கதலீபுரத்துக்கே வந்தாகவேண்டும். இத்தகைய லக்ஷணங்களோடு கூடிய ஊரை பயங்கர நரஸிம்மம் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் தேடிக்கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

அக்ரகாரத்தின் கோடியில் ஒதுப்புறமாக இருந்தது பங்களா. சுற்றிலும் பெரிய தோட்டம். ஸஹாரா பாலைவனத்தில் பக்கிங்ஹாம் அரண்மனை இருந்தால் எப்படியிருக்குமோ அதேபோல் இருந்தது இந்தக்காட்சி. பங்களா வாசலில் பித்தளை எழுத்துக்களில் "ராவ்பகதூர் பயங்கர நரஸிம்மம், ரிடையர்டு போலீஸ் ஸார்ஜெண்ட்'' என்று பொறிக்கப்பட்ட போர்டு தொங்கியது.

பயங்கர நரஸிம்மம் பிர்யாணசிரமம்திர தோட்டத்தில் இருந்த கொட்டகையில் ஈஸிசேரில் சாய்ந்துகொண்டிருந்தார். சிரஞ்சிவி சீமாச்சு என்ற சின்னபயங்கரம் தோட்டத்து மூலையில் இருந்த ஒரு குட்டையில் தவளைகளைச் சிறுகற்களால் சம்ஹாரம் செய்துகொண்டிருந்தான். இதுவரை நாலு தவளைகளைப் பலியாக்கிக் குளக்கரையில் போட்டிருந்தான் குறைந்தபட்சம் ஒரு டஜன் தவளைகளையாவது பிடித்துவிடவேண்டும் என்ற திடசங்கல்பத்துடன் கற்களை வீசிக்கொண்டிருந்தான். பயங்கரத்தின் குமாரி சௌபாக்கியவதி விசாலாக்ஷி பெர்னார்ட்ஷாவின் புஸ்தகம் ஒன்றைப்படித்துக் கொண்டிருந்தாள்.

வேலைக்காரக்கட்டையன் வண்டியிலிருந்து இறங்கும் சாமான்களை உள்ளேவைத்துக் கொண்டிருந்தான். போலீஸ் ஸார்ஜெண்டின் தாயார் சௌந்தரவல்லியம்மாள் ஸ்நானம் செய்துவிட்டு ருத்ராக்ஷஜபம் செய்துகொண்டிருந்தவள்போலக் காணப்பட்டாள். உண்மையில் கோவிலும் இல்லாமல், நல்ல ஆறும் இல்லாமல் இருந்த அந்த க்ஷேத்திரத்தில் பங்களா வாங்கியதற்காகக் கிழவி தன் பிள்ளையைச் சாபமிட்டுக் கொண்டிருந்தாள்.

சமையற்கார வைத்தா அடுத்த நிமிஷம் ஸ்டேஜுக்கு வந்து முக்கியமான கட்டத்தை நடிக்கப்போகும் ராஜபார்ட்போன்ற வேஷத்தில் இருந்தாலும், சமையலைத்தான் கவனித்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் அடுப்பிலிருந்து இறக்கிய வெங்காய சாம்பாரை ருசிபார்த்துவிட்டு,உருளைக்கிழங்குக் கறியை வாயில் போட்டுக்கொண்டான். தன் கைவரிசை வெகு திருப்திகரமாயிருக்கிறது என்ற பெருமிதம் அவன் முகத்தில் பிரகாசித்தது. யஜமானனைச் சாப்பிடக் கூப்பிடலாம் என்று போனான். பசி வேளைகளில் போலீஸ் ஸார்ஜெண்ட் மிருகப்பிராயமாக இருப்பார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால் அவருடைய திருக்குமாரனை விட்டு அவரைக் கூப்பிடச் சொல்லலாம் என்று நினைத்தான்.

"எலே சின்னபயங்..." என்று கூப்பிட ஆரம்பித்தவன் சட்டென்று நிறுத்திக்கொண்டான். பிறகு சிரமப்பட்டு அவனுடைய உண்மையான பெயரை ஞாபகப்படுத்திக்கொண்டு "எலே சீமாச்சு!'' உங்க அப்பாவைச் சாப்பிடக் கூப்பிடு!'' என்றான்.

"சின்னம்மா! நீங்க சாப்பிட வரேளா? என்று விசாலாக்ஷியை வெகு பவ்யமாகக் கூப்பிட்டான். வைத்தா பெண்ணினத்தினிடம் மிகவும் மரியாதை காட்டுவது வழக்கம். அதிலும் யௌவனப்பிராயத்திலிருப்பவர்களிடம் சற்று அதிகமாகவே மரியாதை காட்டுவது அவனுடைய பண்பாடு.

சாப்பாடு முடிந்தது. பெரிய பயங்கரம் கொஞ்சம் சாந்தமடைந்தார். "எலே பயலே!'' என்று அருமையாக இளையகுமாரனை அழைத்தார். சீமாச்சு, அப்பாவின் மடியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"என் அப்பா என்னைக்கூப்பிட்டே?'' என்றான் சீமாச்சு.

"இத்தனை நாழி என்ன செஞ்சுண்டிருந்தே?'' என்று கேட்டார் பெரியவர்.

"தவக்களை அடிச்சுண்டிருக்கேன், அப்பா! இன்னிய சாயங்காலத்துக்குள்ளே நூறு தவக்களை அடிச்சுப்போடறேன், பாரு!''

"பின்னே என்னடா குழந்தை! எனக்கு குறச்சலேயில்லே... சீ கழுதே! இங்கு வந்தப்புறம் உனக்கு அதுதான் வேலையா? சொல்ல வெட்கமாயில்லே, கழுதே!''

"நான் என்ன அப்பா செய்யறது? மண்டை மண்டையாகத் தவக்களையும், பெரிசுபெரிசாகக் கல்லும் கிடக்கும்போத சும்மா இருக்கமுடியுமா, அப்பா?'' என்று பிரதிவாதம் செய்தான் சிரஞ்சீவி சீமாச்சு.

"அம்மா விசாலம்! இந்தப் பிருஹஸ்பதிக்குக் கொஞ்சம் இங்கிலீஷ்சொல்லிக்கொடேன்,அவன் பாட்டுக்குத் தவக்களை பிடிச்சுண்டிருக்கான்!''

"அப்பா! அவன் நான் சொல்றதைக் கேக்க மாட்டேங்கறான். அவனுக்கு யாராவது ஒரு பிரைவேட் வாத்தியாரை ஏற்பாடு பண்ணுங்கள்'' என்றாள் விசாலாக்ஷி.

"எங்கே! படிப்பு வரதாத்தோணலே. அந்தப் பெரிய பிருஹஸ்பதியினுடைய மூளைதான் இவனுக்கும்'' என்று அலுத்துக்கொண்டார் ராவ் பகதூர் பயங்கரம்.

இதற்குள் சீமாச்சு, அப்பாவின் மடியிலிருந்து எழுந்திருந்து சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம் 'விர்' ரென்று ஓடி தோட்டத்து மூலையில் பதுங்கிக் கொண்டான்.

வாசலில் கேட்டுக்கருகில் ஒரு ஆள் வந்து நின்றான். "ஐயா!'' என்று கூப்பிட்டான்.

"யாரப்பா?'' என்றான் வீட்டுக்காரன்,

"நீங்க இப்போ கல்லே விட்டெறிஞ்சீங்களா வெளியே?'' என்றான் அந்த ஆள் ராவ்பகதூரை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டே.

"என்னடா உளர்றே? இந்தப் பக்கம் இன்னும் மதுவிலக்கு வரலையா என்ன?''

"எசமான்! சத்தியமாச் சொல்றேன். இதோ பாருங்க!'' மடியிலிருந்து ஒரு கருங்கல் துண்டை எடுத்துக் காண்பித்தான். "உங்க வீட்டுக் காம்பவுண்டிலேருந்து இந்தக்கல் எம்மேலே வந்து விளுந்தது!''

"பயங்கரம் சற்று யோசித்தார். அவருக்கு உண்மை புலனாகியது.

"சரி, நீ போ! நான் இனிமே அப்படி நடக்காமே பாத்துக்கறேன்!'' என்றார்.

"இன்னமே அப்படி நடந்தா நீங்க பாத்துக்க வேண்டாம், யசமான்! நானே சரியானபடி கவனிச்சுக்கிறேன்!'' என்று உறுமிக்கொண்டே அந்த ஆள் தன் வழியே சென்றான்.

சமையற்காரன் வைத்தா இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டேயிருந்தான். "எலே சீமாச்சு! உன்னைச் சரியானபடி கவனிக்கிறதுக்குஆளெல்லாம் இருக்கா இந்தப்பக்கத்திலே! இந்த வயசு காலத்திலே அப்பாவுக்குப் புத்திர சோகம் வரும்படி பண்ணாதே!'' என்றான் வைத்தா புதருக்குப் பின்னால் ஒளிந்திருந்த சீமாச்சுவிடம். "ஏமாத்திப்பிட்டேனே! என்னைப் பிடிக்க முடியுமோ?'' என்று பாடிக்கொண்டே போலீஸ் ஸார்ஜெண்டின் குலவிளக்கு தவளை வேட்டையாடக் கிளம்பினான்!

(தொடரும்)

மாதர் மகா சபை

குங்குமம்

'நாம் நினைக்கிறது ஒன்றுகூட சரியில்லை' என்றாள் ருக்குவின் மாமியார்.

'ஏன்மாமி! என்ன நேர்ந்து விட்டது திடீரென்று?' என்றாள் வசந்தா.

'நான் எத்தனையோ தரம் எல்லோரிடமும் சொல்லி ஆச்சரியப்பட்டதுண்டு. வசந்தாவும் வசந்தாவின் அகமுடையானும் அவ்வளவு சாமர்த்தியமாகவும் புத்திசாலிகளாகவும் இருக்கிறதுகளென்று.'

'ஏன், அந்தமாதிரியான அபிப்பிராயம் தவறு என்பதற்கான ருஜூ கிடைத்துவிட்டதாக்கும்?'

'சந்தேகமென்ன! சுத்த அசடுகள் என்ற முடிவுக்குத்தான் வந்துவிட்டேன்.'

'அதென்னமாமி அவ்வளவு சுலபமாக ஒருபெரிய முடிவுக்கு வந்துவிட்டீர்கள்?' என்றாள் சரோஜா.

'கையில் நாலுகாசு அகப்பட்டுவிட்டால்தானென்ன? அதை இப்படியா கரியாக்க வேண்டும்? இதைவிட ஒரு ஏழைக்குக்கொடுத்தாலும் மனதார வாழ்த்திக்கொண்டு இருப்பான்,' என்றாள் ருக்குவின் மாமியார்.

'சரிதான். மாமி புதிர்போட ஆரம்பித்து விட்டார்' என்றாள் சரோஜா.

'இல்லாமலென்னடி! பிளாக் மார்க்கெட்டில் கஷ்டமில்லாமல் 'இந்தக்கைக்கு அந்தக்கை' ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கிறவன்கூட இந்தமாதிரியான அசட்டுவியாபாரம் செய்யமாட்டான். நானே நேரில்வந்து வசந்தாவின் மாமியாரிடம் அவள் பிள்ளையின் அசட்டுத்தனத்தைச் சொல்லவேண்டுமென்றிருந்தேன். சே! நமக்கேன் அந்த வீண் வம்பெல்லாம்! அவர்களாயிற்று, அவர்கள் பணமாயிற்று. அவர்களுக்கு இல்லாதஅக்கரை நமக்கெதற்கு? அத்துடன் மாமியார், நாட்டுப்பெண் என்ற வித்தியாஸமில்லாமல் இந்த வேளைக்கு சந்தோஷமாய் 'பச் சென்று' இருக்கிறதுகள். அதில் நாம் குறுக்கிட்டு அனுவசியமான சண்டையையும் சச்சரவையும் உண்டுபண்ணுவானேன்?' என்று இருந்துவிட்டேன்.

'என்னடி அப்படிப்பட்ட தவறு செய்துவிட்டீர்கள்?' என்று வசந்தாவைப் பார்த்துக் கேட்டாள் சரோஜா.

'அதென்னமோம்மா' வாஸ்தவத்தில் எனக்கே தெரியவில்லை. மாமியைத்தான் கேட்கவேண்டும்' என்றாள் வசந்தா.

'சரிதான் உனக்கே தெரியாமல் உங்களகத்து விஷயம் மாமிக்குத் தெரிந்திருக்கிறது! பேஷ்! எனக்கு என்னவோ யக்ஷிணி வந்து சொல்லும், யக்ஷிணி வந்து சொல்லும் என்று சொல்லுகிறீர்களே. அதைவிடப் பெரிய யக்ஷிணியாக இருக்கும் போலிருக்கிறதே இது' என்றாள் சரோஜா.

'அதெல்லாம் கிடக்கட்டும். என்ன விஷயம் சொல்லுங்கள் மாமி' என்றாள் பானு.

'காலம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டு வருகிறது. எல்லோரும் கிராமத்தை விரும்பிய காலம் ஒன்று இருந்தது. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அது கொஞ்சநாளைக்கு முந்திய சமாசாரம். இப்பொழுது எல்லாம் ஒரே பட்டணமோகம். கிராமத்தில் உள்ளவர்களும் தங்களுக்கிருக்கும் 'கொஞ்ச நஞ்சத்தை' விற்றுவிட்டு பட்டணத்தில் வந்து அடைபடுகிற காலம் இது. கிராமமெல்லாம் ஒரே பாழ், சூனியம். மொத்தம் நூறு வீடுகள் இருந்தால் நாற்பது வீடுகள் பூட்டியிருக்கும். இருபது வீடுகள் கூரைகள் விழுந்து போய் குட்டிச்சுவர்களாக நிற்கும். பத்து பதினைந்து வீடுகளில் சந்ததி இல்லாத விதவைகள் தங்கள் 'ஜீவனும்சத்தை' வைத்துக்கொண்டு காலந் தள்ளுகிறவர்களாக இருப்பார்கள். இரண்டு, மூன்று வீடுகளில், ஏதோ 'நமோதுக்காக' நடக்கும் பாடசாலை வாத்தியார்கள் குடியிரு

பார்கள். மீதி வீடுகளில் உள்ளவர்கள் அங்கே இருக்கவும் மனமில்லாமல், குடும்பத்தை நகரத்துக்குக் கிளப்பவும் தைரியமில்லாமல் தாமரை இலைமேல் தண்ணீராகத் தத்தளித்துக் கொண்டிருப்பார்கள். இப்படிப் பட்ட சமயத்தில் அங்கே ஒரு வீட்டை வாங்க வேண்டுமென்று ஒரு புத்திசாலிக்குத் தோன்றிற்றே அதைத்தான் சொல்லுகிறேன், வேறொன்றுமில்லை' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அம்மாடி! முடிந்ததா பிரசங்கம்! என்னடா அப்பா என்று பார்த்தேன். நாங்கள் கிராமத்தில் வீடு வாங்கினதற்கா இவ்வளவு அமர்க்களம்? என்னமோ, ஏதோ என்று பயந்து போய்விட்டேன்' என்றாள் வசந்தா.

'மறுபடியும்தான் சொல்கிறேன். இந்த சமயத்தில் கிராமத்தில் எதற்காக வீடு வாங்குகிறது? கொழுத்துப் போயிருப்பவர்கள் செய்யும் வேலைதானே இது! என்னமோ பத்து வருஷம் உத்யோகம் பார்த்தீர்கள். வயிற்றை வாயைக் கட்டி குருவி சேர்க்கிற மாதிரி நாலு காசு சேர்த்தீர்கள். அதுவரையில் சந்தோஷந்தான். கூடவே அதைக் காப்பாற்றவும் தெரிய வேண்டாமா. கிராமத்தில் வீடு வாங்குகிறீர்களே. அது என்னத்துக்கு உபயோகம்? நீங்கள் போய் என்னமோ இருக்கப்போகிறதில்லை. ரிடையரானால் கூட மூச்சு அடங்குகிறவரையில் மனுஷ்யன் ஒன்று மாற்றியொன்று எந்த வழியிலாவது வீண் பொழுது போக்காமல் நாலு காசு சம்பாதிப்பதில் தான் கருத்தாக இருக்கிறான். அதெல்லாம் அந்தக் காலம். ரிடையர் ஆனவுடனே கிராமத்துக்குப்போய் 'ஓய்வு' எடுத்துக்கொள்வதென்பது. அத்துடன் பயிரிடுவதற்கோ, வேலை செய்வதற்கோ ஒரு ஆள் ஏது? எல்லாம் பட்டணத்துக்கல்லவோ வந்துவிட்டார்கள்?'

'ஆமாம். நீங்கள் சொல்வதையெல்லாம் ஒத்துக்கொள்ளுகிறேன். பட்டணத்தில் பத்து, பதினைந்து ஆயிரத்துக்குக் குறைந்த வீடு ஏது உங்களுக்கு?'

'சரி! கிராமத்தில் ஆயிரம் ரூபாய்க்கே வீடு அகப்படுகிறதென்று வைத்துக்கொள்வோம். பட்டணத்தில் இருபது ஆயிரம் கொடுத்து வாங்கினாலும் அதற்கு என்றைக்கும் மதிப்பு உண்டு. அத்துடன் சொல்கிற வாடகையைக் கொடுத்துவிட்டுப் போக எத்தனையோ பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கிராமத்தில் அப்படி இல்லையே. ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினால் அந்த ஆயிரம் ரூபாயும் 'கிருஷ்ணார்ப்பணம்' தானே! பின்னிட்டு பைசாவுக்குக் கேட்கிறவர்கள் உண்டோ?'

'இங்கேதான் நீங்கள் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விட்டீர்கள். பட்டணத்தில் குடித்தனக்காரர்கள் படும் கஷ்டம் தெரிந்து அதை மனதில் வைத்துக்கொண்டு பார்த்திருந்தால் இந்த முடிவுக்கு வந்திருக்கமாட்டீர்கள். பொதுவாக ஜனங்கள் பணத்தாசை பிடித்து அலைகிறகாலம் இது. எவ்வளவு வந்தாலும் போதும் என்ற திருப்தி ஏற்படாதகாலம். முன்பெல்லாம் வியாபாரிகள் ரூபாய்க்கு ஒரு அணா லாபம் வந்தால் அதுவே 'உடம்புக்கு ஆகாது'. அதில் எட்டில் ஒருபாகமாவது தர்ம விஷயத்தில் உபயோகப்படுத்தினால்தான் 'உடம்புக்கு ஆகும்' என்று நினைத்தார்கள். இப்பொழுது ஒன்றுக்கு எட்டு பங்கு லாபம் வைத்துக் கொண்டு விற்றால்கூட மனது திருப்தி அடைகிறதில்லை. அத்துடன தர்ம விஷயத்துக்கு ஏதாவது செலவு செய்தால்கூட அதிலிருந்து ஒரு லாபத்தை முன் கூட்டியே எதிர்பார்த்துதான் 'நன்கொடை' அளிப்பார்கள். இந்த 'பேராசை' வியாதி வியாபாரிகளிடம் மாத்திரம்தான் இருக்கிறதென்று நினைக்க வேண்டியதில்லை. இந்த நோய் ஒவ்வொரு மனிதனிடமும் பூரணமாகக் குடிகொண்டிருக்கிறது. வியாபாரிகள்ள மார்க்கெட் பேரம் செய்கிறான். உத்தியோகஸ்தன் லஞ்சம் வாங்குகிறான். பொதுஜனம் தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் ஏமாற்றி அகப்பட்டதைச் சுருட்டிக்கொள்ளப்பார்க்கிறது........' என்று வசந்தா சொல்லி முடிப்பதற்குள் 'இப்படியாகத் தானே மனிதன் பேராசையாகிற

"......மந்திரி கொஞ்சமும் சளைக்காமல் பாட்டு மூலமாகவே பதில்........"

கடலில் இறங்கி' திக்கு திசை தெரியாமல் தவித்துத் திண்டாடுகிறான். சரிதானா?

ஏது இன்று ஒருவர் மாற்றியொருவர் உபந்யாஸத்தில் இறங்கிவிட்டீர்கள்? முன்பெல்லாம் நாடகம் என்றால் தர்க்கம்தானாம். அதாவது வசனமே இருக்காதாம். பாட்டு மூலமே சம்பாஷணையாம். ராஜா ஒரு விஷயத்தை பாட்டு மூலமாகவே கேட்பானாம். மந்திரி அதற்குக் கொஞ்சமும் சளைக்காமல் பாட்டுமூலமே பதில் சொல்லுவானாம். அந்தமாதிரியல்லவோ இருக்கிறது இன்று நீங்கள் பேசுகிற பேச்சு. 'என்னடி போயும், போயும் கிராமத்தில் போய் வீடு வாங்கினீர்களே!' என்று ஒரே வார்த்தையில் கேட்டால், என்ன மாமி செய்கிறது. இந்த வீட்டு, சொந்தக்காரர்கள், குடித்தனக்காரர்கள் விஷயத்தில் நடந்துகொள்ளும் ஒரு அக்கிரமம், அநியாயத்தைப் பார்த்துவிட்டு நாம் எப்படி முன் ஜாக்கிரதை இல்லாமல் இருக்க முடியும்?' என்று சாதக பாதகங்களை இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி முடித்தால் தீர்ந்தது. அதை விட்டுவிட்டு கிராமம், நகரம் என்று பெரிய பெரிய உபன்யாசத்தில் இறங்கிவிட்டீர்களே!' என்றாள் சரோஜா.

"...ஏதோ எக்ஷிணிதாண்டி உன்னிடத்தில் இருக்கிறது என்று..."

'நிஜமாகவே ஏதோ யக்ஷிணி தானடி உன்னிடத்தில் இருக்கிறது, என்று வசந்தா சரோஜாவைப் பார்த்து சொல்லிவிட்டு ஆச்சரியத்தின் மிகுதியால் மூக்கில் விரல் வைத்தாள்.

'நிஜமாகவே நீங்கள் குடியிருக்கிற வீட்டுக்கு ஏதாவது தகராறு என்ன?' என்று கேட்டாள் ருக்கு.

'நாங்கள் குடியிருக்கிற வீடு என்பதென்ன. இந்தக் காலத்தில் யார் குடியிருக்கிற வீட்டிற்கும் ஆபத்துதான். எங்களகத்தில் மூன்று குடித்தனம். இரண்டு மாதத்துக்கு முன்பு ஒரு குடித்தனக்காரர் கிளப்பப்பட்டார். அவர் அந்த 'போர்ஷனுக்கு பதினைந்து ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த இடத்துக்குப் புதிதாக குடி வந்திருப்பவர் நாற்பது ரூபாய் வாடகை கொடுக்கிறாராம். மற்றொருவர் சென்றமாதம் கிளப்பப்பட்டார். அவர் அந்தப் போர்ஷனுக்குப் பதிமூன்று ரூபாய் கொடுத்துக்கொண்டிருந்தார். இப்போது புதிதாகக் குடித்தனம் வந்திருப்பவர் முப்பது ரூபாய் கொடுக்கிறாராம். அடுத்தபடியாக எங்களுக்கு நோட்டீஸ் வந்திருக்கிறது. நாங்கள் இருபத்தைந்து ரூபாய் வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதற்கு யாரோ ஐம்பது ரூபாய் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்களாம். திடீரென்று கிளப்பி விட்டால் குடித்தனத்தைக்கிளப்பிக்கொண்டு எங்கே போய் தங்குவது? முன்காலமா 'பாவம்! திடீரென்று கிளப்பி விட்டால் அவர்கள் எங்கே போய் தங்குவார்கள்? வேறு இடம் பார்க்கிறவரையில் கொஞ்சம் பொறுப்போம்' என்று வீட்டு சொந்தக்காரர்களுக்கு நியாய புத்தி ஏற்படுவதற்கு! அல்லது குடி வருகிறவர்களும் 'திடீரென்று ஒரு குடும்பத்தை நடுத்தெருவில் இழுத்து விட்டு விட்டு நாம் போய் அங்கே இருப்பது நியாயமில்லை' என்று கொஞ்சமாவது யோசனை செய்வார்களா? அவரவர்களுக்கு அவரவர்கள் லாபத்தில்தான் கண். அப்படித்தான் இல்லாமல் வீட்டிலுள்ள குடித்தனக்காரர்கள் எல்லோரும் ஒரே கட்டுப்பாடாய் இருந்து விடுவதாகவே வைத்துக்கொள்வோம். 'உங்களுக்கென்ன ஸார் வந்தது. ஆயிரக் கணக்கில் கொட்டி வீட்டை வாங்கினால் அதன் அருமை பெருமை தெரியும்! இன்று இரண்டு ரூபாய் வாடகை கொடுத்துவிட்டு, சௌகரியமாக வேறு வீடு கிடைத்தால் நாளைக்கே துணியை முறுக்கித் தோளில் போட்டுக் கொண்டு போய்க்கொண்டே இருக்கப்போகிறீர்கள். வீடு தலைமேல்விழக் காத்துக்கொண்டிருக்கிறது. ரிபேர் செய்ய வேண்டும். காலி செய்துவிட்டு மறுவேலை பாருங்கள்' என்று



பிரதம மந்திரி நேரு, லண்டனில் நடைபெறும் டொமினியன் பிரதம மந்திரிகள் மகாநாட்டுக்கு விஜயம் செய்ய டில்லியிலிருந்து விமானத்தில் புறப்படுமுன் கவர்னர் ஜெனரல் ராஜாஜி, ஸர்தார் படேல், ராஜகுமாரி முதலியவர்கள் வழியனுப்பினர்.

கடைசி பாணத்தைப் பிரயோகித்து விடுவார் வீட்டு சொந்தக்காரர். அதற்குமேல் நாம்என்ன செய்யமுடியும்? சாமான்களை வண்டியில் ஏற்றவேண்டியதுதான்?' என்றாள் வசந்தா.

'என்ன யோசிக்கிறீர்கள் மாமி! வீடு கிடைக்காத இந்தக் கஷ்டகாலத்தில் இப்படித் திடீரென்று கிளப்பிவிட்டால் சம்சாரிகள் எங்கேபோய் தங்குவது? இந்த கஷ்டத்தைப் போக்க சர்க்கார் ஒன்றுமே செய்யாமலா இருக்கிறார்கள். வீடு ரிப்பேர் ஆனதும் முதலில் அங்கு குடியிருந்தவர்களுக்கேதான் வீட்டை விடவேண்டும் என்று சர்க்கார் ஏன் ஒரு சட்டத்தைக் கொண்டுவரக்கூடாதென்று யோசிக்கிறீர்களா? யோசியுங்கள், யோசியுங்கள். யோசனை செய்துகொண்டே இருக்கவேண்டியதுதான். நியாயத்துக்குத்தான்காலமில்லையே. பதினாயிரம் இருபதினாயிரம் கொடுத்து வீடு வாங்க முடியாதவர்கள் இப்படிப்பட்ட ஆபத்தான சமயங்களில் தற்காலம் தங்குவதற்குத்தான் குறைந்த விலையில் கிராமத்தில் ஒரு வீட்டை வாங்கிப்போட்டு வைப்பது. அகமுடையான் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு, குடும்பத்தை கிராமத்தில் விட்டுவைக்கலாம் பாருங்கள்.? தெரிந்ததா அவர்கள் கிராமத்தில் வீடு வாங்கியிருப்பதற்குக் காரணம்?' என்றாள் சரோஜா.

'அதாவது எப்படியாவது சொந்தத்தில் ஒரு வீடு இல்லாமல் இந்த நாகரிக உலகத்தில் மனுஷ்யன் பயமில்லாமல் ஜீவிக்க முடியாது என்று சொல்லுகிறீர்கள்!' என்றாள் ருக்குவின் மாமியார்.

'கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு மாமி?' என்றாள் சரோஜா. ஆமாம். பேசிக்கொண்டே இருந்தால் கனகாவாத்துக்கு கொலுவுக்கு வருவதாகச் சொல்லியிருந்தோமே. நேரமாகவில்லையா? கிளம்புங்கள்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் பானு.



குடல் கிருமிகள்

பண்டித
எம். துரைசாமி ஐயங்கார்

★

அசுத்தமான ஆகாரம் ஆரோக்கியக்குறைவுக்குக் காரணம் என்பதை அனைவரும் அறிவர். அசுத்தமான ஆகாரமும் அநேகம் வியாதிகளுக்குக் காரணமென்பதும் பலர் அறிந்த விஷயம். ஆனால் அவ்வசுத்தத்தைப் பரிகரிக்க வேண்டிய முறைகளைக் கருத்துடன் கவனித்து நடப்பவர் வெகு சிலரே. அசுத்தமான ஆகாராதிகளால் உண்டாகும் முக்கியமான நோய்களுள் கிருமி ரோகம் என்பது ஒன்று. அசுத்தமான உணவுகளால் கபதோஷமும் அதிகரித்து ஆமாசயத்திலும் (இரைப்பையில்), சிறு குடல் பெருங் குடல்களிலும் பல வேறு வகையான கிருமிகள் உற்பத்தியாகி விருத்தியாகின்றன. சில கிருமிகள் வெகு நீண்ட ப்ரத்நங்கள் (நாடா) போன்றவை; வேறு சில கண்டுபதங்கள் (மண்ணுணிப் பாம்பு) போன்றவை: மற்றுஞ் சில முளைத்த தான்யாங்குரங்களைப் (தானிய முளைகள்) போன்றிருப்பவை. இன்னும் சில அணுரூபமானவை.

குடலைத்தாக்கி அருவருக்கத்தகும் விகாரமளிக்கும் இப்பூச்சிகளைப் பரான்னாசிகள் (Parasitical) என்ற உயிரினத்தைச் சேர்ந்தவையென்றும், இவை ஐந்து வகைப்படுமென்றும் மேனாட்டு வைத்திய முறையில் வழங்குவர். ஆயுர்வேதத்தில் அந்திராதம், உதரா வேஷ்டம், ஹ்ருதயாதம், மஹாருதம், சுரு, தர்ப்பகுஸுமம், ஸுகந்தம் என்று இக்குடற் கிருமிகள் ஏழுவிதங்கள் என்று விளக்கப்பட்டிருக்கிறது. இங்கு வெகுவாய் வழக்கத்திற் காணப்படும் சில கிருமிகளைப்பற்றியே இங்கு சில விவரம் கூறமுடியும்.

இவற்றுள் அந்திராதம் என்ற பூச்சி ப்ரத்நம் (நாடா) போன்றது; இது பெரியவர்களுக்கு வெகு சாதாரணமாக உண்டாவதாகும். உதராவேஷ்டம் என்பது கண்டுபதம் அல்லது மண்ணுணிப்பாம்பு போல்திரண்டு நீண்டு வளர்ந்திருப்பது; இது பெரும்பாலும் சிறுவர்களுடைய குடலில் ஏற்படுவது. சுரு என்பது தானியமுளைகளைப் போல் காணப்படும். இவ்வகையான கிருமி பெரியவர், சிறியவர் ஆகிய இருவருக்கும் ஏற்படும். எவ்விதமான கிருமி உண்டாயிருக்கிறதென்பதை பிணியாளியின் மலத்தை நேரில் பார்த்துக் கவனித்தால்தான் தீர்மானமாகக் கூறமுடியும். எவ்விதமான கிருமியுண்டாயிருந்தபோதிலும், அவ்வனைத்துக்கும் காணக்கூடிய குறிகள் பெரும்பாலும் ஒரே நீதியாகத்தான் இருக்கும்.

அந்திராதம் என்பதையே (ப்ரத்நம்) நாடாப்பூச்சி என்போம். இது பல கணுக்கள் அல்லது துண்டுகளாக இருக்கும்; அல்லது நெடுகவும் ஒன்று சேர்ந்து பல அடிகளளவாய் குடல் முடியவும் நீண்டு வியாபித்திருக்கும். அல்லது சிறு குடலிலாவது பெருங் குடலிலாவதுமட்டும் இருக்கலாம். இந்த நாடாபூச்சி கணுக்கணுவாய் வளர்ந்து வரும்போது, வால் பக்கமாயுள்ள துண்டுகள் வேறுபட்டு மலத்துடன் கண்டங்கண்டமாய் வெளிவருவதுண்டு. நாடாப் பூச்சி அசுத்தமான உணவுகளை —முக்கியமாய் ஊசிப்பதனழிந்த இறைச்சியை உட்கொள்வதால் உண்டாகின்றது. சில வகை மீனுணவுகளும் குடலில் பதனழிந்து இவ்வகை கிருமி ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

உதராவேஷ்டம் அல்லது கண்டுபதம் போன்ற குடற் புழுதான் திரண்டுருண்ட நீண்ட நாக்குப் பூச்சியெனப்படுகிறது. இது குடலில் எந்தப் பாகத்திலும் இருக்கலாம்: ஆமாசயத்திலும் (இரைப்பையில்) இருக்கலாம்; இதில் இப்பூச்சி சேர்ந்திருக்கும்போது குமட்டலும் வாந்தியும் ஏற்பட்டு, இவை வாய் வழியாகவும் வெளிவருவதுண்டு. இவை ஆமாசயத்திலிருந்து ஊர்ந்து நாசி வழியாகவும் ஒவ்வொரு சமயம் வெளியாகும். சிலருக்கு இது குடலைத் துளைத்து ஊடுருவிச் சென்று யக்ருத் (கல்லீரல்) முதலிய அவயவத்தைத் தாக்கி, கிருமி சம்பந்தமான காமாலைக்கும் காரணமாகலாம். மூன்று முதல் பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கே இக்கிருமி ரோகம் அநேகமாய் உண்டாவது வழக்கம். ப்ரத்ந க்ருமிகளால் (நாடாப் பூச்சிகளால்) காணும் மற்ற குறிகளை இதிலும் காணலாம். மலத்தில் எப்பொழுதேனும் இக்கிருமி ஒரு முறை விழுந்திருப்பதைப் பார்த்தால், பிறகு அது போன்ற பல கிருமிகள் குடலில் இருக்குமென்று தீர்மானிக்கலாம்.

தானிய முளைகளைப்போன்ற சுரு என்கிற சிறிய கிருமிகளைச் சாதாரணமாகத் திமிர்ப்பூச்சிகள் என்பார்கள். மெல்லியனவாக சுமார் கால் அங்குலம் நீண்டு வெளுப்பாயிருக்கும். இச்சிறு கிருமிகள் மலாசயம் என்கிற

கிழ்க்குடலிலே சேர்ந்து,குதபாகத்தில் (ஆஸனத்தில்) அடிக்கடியும் அரிப்பையும் வேதனையையும் தருவது வழக்கம். இச்சிறு சுரு கிருமிகள் மலத்துடன் அடிக்கடி வெளிவந்து அதில் நெளிந்து அசைவதைக் காணலாம். இக்கிருமி அதிகரிப்பதால் சிலருக்கு வயிற்றில் அழற்சி எற்பட்டு, வயிற்றுக் கடுப்புடன் சீதமும் வெளிவரும். பலக்குறைவாகவும் அசுத்தமாகவுமுள்ள (அநாரோக்கிய நிலைமையைப் பெற்ற) குழந்தைகளின் குடலில் இக்கிருமி மிகுதியாயேற்பட்டுத் தொந்தரவளிக்கும்.

காலா காலங்களை அனுசரிக்காமல், சுத்தா சுத்தங்களை உணராமல், தோன்றியவாறு மீதூண் அருந்துபவருக்கு, குடலின் ஜீர்ண சக்தி, ஒழுங்கீனம் அடைந்திருப்பவருக்குக் கிருமிகள் சாதாரணமாய் உண்டாவது வழக்கம். ஜீர்ணகோசங்களைக் கிருமிகள் தாக்கித் தொந்திரவளிக்கும்பொழுது வயிற்றில் முக்கியமாய் ஆமாசயந்திலும் (இரைப்பை) குடலின் வேறு பாகங்களிலும் வேதனை யுண்டுபண்ணுவதோடு, வேறு பல வகைக் கோளாறுகளுக்கும் காரணமாகின்றன. அஜீர்ணம், பசியின்மை, அதிஸாரம், வயிற்றுப்பொருமல் முதலியவை குடலைப்பற்றிய கிருமி ஸம்பந்தமான கோளாறுகளாகும். குடலில் கிருமி எவருக்குச் சேர்ந்திருக்கிறதோ அவர்கள் பேசும்போதும் மூச்சுவிடுகையிலும் ஒருவித துர்நாற்றம் வீசும். இவர்கள் அடிக்கடி மூக்கைச் சொறிந்து அல்லது தடவிக்கொள்வார்கள்; இவர்களுடைய வயிறு விம்மியும் கெட்டியாகவும் இருக்கும்; நாக்கு மிகச் சிவந்தாவது அல்லது அழுக்குப் படிந்தாவது காணப்படும். தூங்கும்போது பற்களைக் கடித்துக் கொள்வதும் வழக்கம்: சிலர் அடிக்கடியும் சொற்பம் சொற்பமாகவும் மலபாதைக்குப் போகும் உணர்ச்சியுள்ளவர்களாயிருப்பார்கள்; இவர்களுக்கு உடல் இளைக்கும்; மந்த ஜ்வரம் இருந்துவரும்: சிலருக்குத் தலை கிறுகிறுப்பும், மயக்கமுங்கூட காண்பதுண்டு. இவ்விதமான அருவருக்கக் கூடிய பொதுக்குறிகள் கிருமி ரோகத்தில் பலரிடமும் காணக்கூடியன.

ப்ரத்நங்கள் என்ற நாடாப் பூச்சிகள் குடலிலிருந்தால், தேகம் வெளிறி இரத்தக் குறைவான (பாண்டு ரோக) நிலைமையும், பலவகை வியாதிகளால் வருந்துவதாக மனக்கோளாறும், வாத வியாதிகளென்கிற நரம்பு சம்பந்தமான விகாரங்களும் தோன்றும். குழந்தைகளுக்கு முக்கியமாய் கண்டுபத முகங்கள் என்ற நாக்குப் பூச்சிகள் ஏற்பட்டிருந்தால், அவர்கள் போதிய உணவுகளைப் புஜித்துவந்தபோதிலும், நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டே இருப்பார்கள். இப்பூச்சிகளால் வருந்தும் குழந்தைகளுக்கு இசிவும் வலிப்பும் வெகு சாதாரணமாக ஏற்படும். ப்ரத்நம் என்ற நாடாப் பூச்சிகள் அசுத்தமான அல்லது நன்கு பக்குவம் செய்யப்படாத இறைச்சியை யுண்பவருக்குப் பெரும்பாலும் குடலில் இடம் பெறுவது வழக்கம்.

சிகித்ஸை

இதில் முதலில் சுத்தமாகப் பக்குவம் செய்த உணவையும், பழகிப் பதனழியாத உணவையும் உண்பதில் கருத்தாயிருப்பதோடு, அகால போஜனத்தையும் அமிதமான போஜனத்தையும் தவிர்க்க வேண்டியது அவசியம். மாம்ஸ போஜனம் உண்பவர் அவ்வித உணவைக் கூடியவரையில் குறைப்பதும், நன்கு பக்குவம் செய்யப்படாத அவ்வுணவை முற்றிலும் அகற்றுவதும் அவசியம். உடலுக்குப் போஷணை தரக்கூடிய புதிதாகப் பக்குவம் செய்த ஆகாரங்களை மிதமாக உட்கொள்வது நலம். ப்ரத்நங்கள் என்ற நாடாப் பூச்சிகளை வெளிப் படுத்துவதற்கு ஏற்ற சரக்குகள் பெரும் பூசுணி வித்துகள், பலாசம் வித்துகள், கரியபோளம், காட்டாமணக்கு வித்துகள் ஆகியவை ஏற்றவை. நன்ருக முதிர்ந்த பெரும் பூசுணி வித்துகளை உலர்த்தித் தோல் நீக்கி, வயதுக்குத் தகுந்தவாறு, வேளைக்குப் பத்து முதல் இருபது பருப்புகள் வீதம் ஒரு நாள் மூன்று நான்கு முறைச் சாப்பிட்டு, மறுநாள் உதயம் இரண்டு, மூன்று பலம் ஆமணக்கெண்ணெயைச் சாப்பிட்டால், நாடாப் பூச்சிகள் இருந்தால், மலத்துடன் வெளி வந்துவிடும். கண்டு பதங்கள் என்ற நாக்குப் பூச்சிகளை வெளிப்படுத்த ஐந்தாறு குன்றுமணியெடை கற்பூரத்தைப் பெருஞ்சீரகத்துடன் (சுமார் 10 குன்றுமணியெடை) சேர்த்துப் பொடிசெய்து உட்கொண்டு, இரண்டொரு யாமம் கழித்து சிறிது ஆமணக்கெண்ணெயைப் பசும்பாலில் கலந்து உட்கொள்ளலாம். வேப்பங்கொழுந்து ஒரு பிடியளவு, கருஞ்சீரகம் சுமார் ஆறு குன்றுமணி எடை, ஐந்தாறு மிளகு, ஏழெட்டு குன்றுமணி எடை வசம்பு இவற்றை ஒரு சிறிது நீர் ஊற்றி அரைத்து விழுதாகச் செய்து உட்கொண்டபின் இரண்டு மணி நேரத்துக்குள் சிறிது விளக்கெண்ணெயைச் சாப்பிட்டால் சுரு என்கிற திமிர்ப்பூச்சிகள் வெளியாகும்.

குடலில் உண்டாகும் எவ்விதமான கிருமிகளையும் வெளிப்படுத்தப் பொதுவான முக்கிய ஔஷதங்கள் கிருமிஹரவடி, முஸலீகந்தாதி சூர்ணம், காங்காயந குளிகை, த்ரிவ்ருத்குளிகை, அபயாமோதகம், நாராயண சூர்ணம் முதலியனவாம். இவற்றுள் முதலில் குறிப்பிட்டுள்ள மூன்று ஔஷதங்களும் குடல் கிருமிகளைக் கொல்லுவதற்கும். பிந்திய, மூன்று மருந்துகளும் அவ்வாறு சிதைக்கப்பட்ட பூச்சிகளை மலத்துடன் வெளிப்படுத்தி விரேசநம் (பேதி) செய்விக்கவும் உத்தேசிக்கப் பட்டவை.

குடல் கிருமிகள் ஏற்பட்டால் அவை நேருக்கு நேராய் வயிற்று நோய், குடற் பொருமல் முதலிய சங்கடங்களை உண்டு பண்ணுவதோடு, பசியின்மை, அஜீர்ணம், அதிஸாரம் வாந்தி, காமாலை, தலைவலி, தலை சுற்றல், மயக்கம், பாண்டு ரோகம், வலிப்பு முதலிய வேறு பல உபத்திரவங்களுக்கும் காரணமாவதால், இக்கிருமிகள் உண்டாகாது முன்னெச்சரிக்கையுடன் ஆகாரநியமம் முதலியவற்றைக் கருத்துடன் கவனித்து நடப்பதோடு, அவை உண்டானபின் கூடிய சீக்கிரத்தில் அவற்றைக் குடலிலிருந்து வெளிப்படுத்தவும் ஏற்ற பரிகார முறையைக் கையாளுவதால் ஆரோக்கிய நிலைமையை அனைவரும் நிலைநிறுத்திக் கொள்ளலாம்.

பெண்மை, அழகு, நாகரிகம்

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

2

வஸந்தம்மையும், நவராத்திரியும்

★

'பாரி மெம்ஸாஹிப்' என்று வடநாட்டார் டாக்டர் பெஸன்ட் அம்மையை அழைப்பார்கள். அதற்குப் பொருள் 'பெரிய ஐரோப்பியப் பெண்மணி' என்பதுதான். ஆங்கிலத்தில் 'Grand old Lady'— அதாவது 'பழுத்த பெரியார்' என்று சொல்லுகிறார்கள் அல்லவா, அதற்கு ஏறக்குறைய இணையாகத்தான் பெஸன்ட் அம்மை விஷயத்தில் 'பாரி மெம்ஸாஹிப்' என்ற ஹிந்துஸ்தானி மொழித் தொடரை நமது வட இந்திய சகோதரர்கள் கண்டுபிடித்திருக்கவேண்டும். தமிழர்களுக்கோ இத்தனிப் பெருங்கிழவி—இந்த ஐரோப்பிய ஔவைப் பாட்டி—பாட்டியே அல்ல: அம்மைதான். 'அம்மா, அம்மா!' என்றுதான் தமிழர்கள் அழைப்பார்கள். எவ்வளவு வயது முதிர்ந்திருந்தாலும் அம்மா பாட்டியாவாளா? அம்மை அம்மைதானே!

'அம்மா' என்ற தமிழ்ச்சொல் அழகான சொல், அதிசயமான சொல்; என்றும் இளமை வாய்ந்த சொல். இச்சொல்லைக்கொண்டு தமிழர்கள் கடவுளையும் பிரியமாய் அழைக்கிறார்கள். லட்சுமி, பார்வதி, சரஸ்வதி முதலான பெண் தெய்வங்களைத்தான் தமிழர்கள் 'அம்மா' என்று அழைக்கிறார்கள் என்பதில்லை அப்பனான இறைவனையும் 'அம்மா' என்று ஆசைதீரக் கூப்பிடுவார்கள்.

அரங்கத்தம்மா ! பள்ளி
எழுந்தருளாயே

என்று பெருமாளைப் பிராட்டியாரை அழைப்பதுபோல் எவ்வளவு பிரேமையுடன் அழைக்கிறார்கள்! ஏன் பெரியோர்களில் ஆண்மக்களையும் 'அம்மா' என்று அழைப்பதுண்டு. 'நடாதூர் அம்மா' என்று வைணவப் பெரியார் ஒருவரைக் குறிப்பிடுவதுண்டு. இத்தகைய அருமையான 'அம்மா' பட்டம் பெஸன்ட் அம்மையாருக்கு டாக்டர் பட்டத்தைக் காட்டிலும் இனிமையாக இருந்திருக்க வேண்டும்.

தம்மை 'மேடம்' (Madam) என்று விளித்துக்கடிதம் எழுதியிருந்த ஒருவருக்குப் பதில் எழுதும்போது பெஸன்ட் அம்மையார், 'இப்படி 'மேடம்' என்று அழைப்பதைக் காட்டிலும் 'அம்மா' என்று பொருள்படும் 'மதர்' என்று அழைப்பதே நான் உகப்பது' என்று குறிப்பிட்டதுண்டு. இத்தகைய தாயுள்ளத்தைக்கண்டு கொண்டதுபோல் தமிழர்கள் பெஸன்ட் அம்மையை 'அம்மை' என்றும், 'வஸந்தம்மை' என்றும் வாய்குளிர அழைத்தார்கள். அம்மையாரும் தம் அருமை மக்களாகவே தமிழர்களை மட்டுமல்ல, இந்தியர் அனைவரையும் மனங்குளிர வாழ்த்தியவண்ணம் வாழ்க்கை நடத்தினார்.

இப்படி நமது நாட்டில் அன்பின் ஒளியும் அறிவின் ஒளியும் வீசிமறைந்த வஸந்தம்மையின் நினைப்பு நவராத்திரி வாரத்தின் போது ஏற்பட இடமுண்டு ஆம், நவராத்திரி தேவியின் விழா. லட்சுமியும் பார்வதியும் சரஸ்வதியும் துர்க்காரூபம் தரித்து, அறியாமையின் அறிகுறியாகிய மகிஷாசுரனை வென்ற மகாசக்தியாக விளங்கினார்களே, அந்த மகத்தான விழா அல்லவா, **விஜயதசமி** என்ற பத்தாம் நாளுடன் முடிவுபெறும் நவராத்திரி விழா? அறியாமையை வென்ற மகா சக்திதான் வஸந்தம்மையின் சாந்த வடிவமாகவும் வந்து ஒளிபரப்பி மறைந்துபோனதாய்க் கருதலாம்.

பெஸன்ட் அம்மையிடம்லட்சுமி அம்சத்தையும் பார்வதி—அம்சத்தையும் காட்டிலும் சரஸ்வதி–அம்சம் அதிகம். பெஸன்ட் அம்மை ஒரே தூய வெள்ளை வடிவம்தான்: முடி முதல் அடிவரையிலும் வெண்ணிறம்: வெள்ளை ரோமம், வெள்ளை உடைவெள்ளை ஜோடு,எல்லாம்ஒரே வசீகரமான, கள்ளமில்லாத வெள்ளை நிறம். அறிவுத் தெய்வமாகிய சரஸ்வதியையும் தமிழ்க் கவி,

வெள்ளைக் கலை உடுத்து,
வெள்ளைப் பணிபூண்டு.
வெள்ளைக் கமலத்து
விற்றிருப்பாள்

என்று பாடியிருக்கிறாரல்லவா?

இப்படி நான்தான் நினைக்கிறேன் என்பதில்லை. பெஸன்ட் அம்மையின் வசீகரமான தோற்றத்தில் லட்சுமியையும், சக்தியில் பார்வதியையும், ஞானத்தில் சரஸ்வதியையும் கண்டதாகக் கவி

ஸரோஜினி தேவியே கூறியுள்ளார்.

பெண்கள்தான் இப்படிச் சொல்லுகிறார்கள் என்பதில்லை. மகாமகோபாத்யாய பண்டித கங்காதர சாஸ்திரியார் C. I. E. இந்தியாவிலேயே அந்நாளில் தனிப்பெரும் புலமை வாய்ந்தவர் ஒரு சமயம் பெஸன்ட் அம்மை வந்துகொண்டிருந்ததைப் பார்த்து அத்தோற்றத்தால் அப்படியே வசீகரிக்கப் பெற்று, 'இதோ வருகிறாள் ஸர்வ-சுக்ல சரஸ்வதி (முழு வெண்ணிற மேனியளான அறிவின் மூர்த்தி)' என்று வியந்துரைத்தார்.

பெஸன்ட் அம்மை நெடிய வடிவினள் அல்ல. எனினும் அந்தக் கம்பீரமான தோற்றத்திலேயே அறிவின் சிகரமாக அவரைக் கண்டு கொள்ள முடிந்தது. ஆனால் இந்த அறிவின் சிகரம் எட்டாத, மூச்சுத் திணறும் பனி மூடிய சிகரமல்ல. அனுதாபத்துடன் அன்பு பொழிந்த ஞான சிகரம். 'ஐரோப்பியர்களில் அனி பெஸன்ட் அம்மை ஒருவரே தமது நாட்டினரின் சீற்றத்திற்கும் இகழ்ச்சிக்கும்கூட இலக்காகி நமது சோகத்தைப் பகிர்ந்துகொண்டவர்!' என்று கவி ரவீந்திரநாதர் கூறியுள்ளார்.

உண்மையில், அன்பு தோய்ந்ததே உண்மையறிவு. பெஸன்ட் அம்மையின் அன்பு தாயன்பு, எல்லையற்று விரிந்த தாயன்பு. இதனால்தான் தமக்கு அன்னியர்களான இந்தியர்களை உள்ளவாறு அறிந்துகொண்டு தாமும் இந்திய மயமாகி விட்டார்.

மேலும் அன்பிலே ஊறி வளரும் அறிவுதான் பணியாகக் கனியும். குழந்தை முதல் வயோதிகர் வரை எல்லாரையும் நேசித்துப் பணிசெய்யமுடியும். பெஸன்ட் அம்மை இந்தியக் குடும்பங்களோடும் நெருங்கிப் பழகினார். இந்தியாவை ஒரே குடும்பமாகவும், தமது சொந்தக் குடும்பமாகவும் கருதினார்.

இவருடைய பேரன்பும், பேரறிவும் இவர் பேசும்போது அலையலையாகப் பாய்ந்துவந்து கேட்பவர் சிந்தைகளையெல்லாம் குளிர முழுக்காட்டுவதுபோலத் தோன்றும். தூய வெண்ணிற உடையுடன் 'அம்மா' பேசும்போது, மெய்ம்மறந்து கேட்கும் இந்தியர்களுக்குச் சில சமயங்களில் 'வெள்ளைக் கலை உடுத்த' வெண்தாமரைமாதே வீழ்ச்சியுற்ற நாட்டை வாழ்விக்கவந்து உபதேசம் செய்வதுபோலத் தோன்றுவதும் உண்டு. இத்தகைய நாவன்மை பெஸன்ட் அம்மையிடம் செயல்வன்மையுடன் சேர்ந்து திகழ்ந்தது.

சில பேச்சாளர்கள் தங்கள் சக்தி முழுமையும் பேச்சிலேயே செலவு செய்துவிடுவார்கள். பேச்சிலும் பெண்களின் பேச்சைச் செயல் திறனுடன் சேராத வெறும் பேச்சென்றும், ஓயாப் பேச்சென்றும் சிலர் பரிகசிப்பதுண்டு. இது அபவாதம்தான் என்பதை பெஸன்ட் அம்மையின் வாழ்க்கை மெய்ப்பித்து விட்டது.

செயல் திறமை இல்லாமலா பெஸன்டைப்போல் நாவன்மையுள்ள ஸரோஜினிதேவி மாகாண அதிபதியாயிருக்கிறார்? பேச்சிலும் வெற்றி சூடும். ஸ்ரீ ஜயலட்சுமி பண்டிட் இந்தியாவின் வெளிநாட்டுத் தூதராய்த் தொண்டாற்றவில்லையா? அறிவின் சிகரமாகவும், சொல்வன்மையின் சிகரமாகவும் விளங்கிய பெஸன்ட் அம்மையார் செயல் திறமையின் சிகரமாகவும் விளங்கினார். குறித்த காரியத்தைக் குறித்த நேரத்தில் செய்து முடிப்பார்.

மாமறைநூல் பொய்த்தாலும்,
வாரிதிநீர் பொய்த்தாலும்,
சோமரவி பொய்த்தாலும்
சொன்னமொழி பொய்யாதான்

[வாரிதி-சமுத்திரம். சோமரவி-சந்திர சூரியர்,]

என்று செயல்-திறமை வாய்ந்த ஒரு சிற்றரசரைக் கவிஞர் ஒருவர் வருணித்திருக்கிறார், அந்தச் செயல்-திறமை வேதம்போல் ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதென்பதும், சமுத்திரம்போல் ஆழமான அன்பை உடையதென்பதும், சந்திரசூரியர்போல் நேரம் தவறாது பிரகாசித்ததென்பதும், சொன்னமொழி தவறாததென்பதும் கவிஞர் அபிப்பிராயம். அத்தகைய செயல்-திறனுக்கு அந்தச் சிற்றரசர்போல் கற்பனை இலக்யமாக அல்ல, உண்மை இலக்கியமாக விளங்கினார் பெண்மையின் பேரரசி என்று சொல்லத்தக்க பெஸன்ட் அம்மையார்.



பெஸன்ட் அம்மையின் பேரறிவையும், ஆத்மசக்தியையும் எல்லாரும் அடையமுடியாது; அந்த அபார ஞாபகசக்தியையும், சொல் வன்மையையும் அடைய முடியாது. ஆனால் அந்தத் தூய

காரியத்தைக் குறித்த நேரத்தில் தவருது செய்த அந்த அருமையான பழக்கத்தையும் சகோதரிகள் எல்லாரும் அடைய முயல வேண்டும்.

குறித்த காரியத்தைக் குறித்த நேரத்தில் செய்வதைக் குறிப்பிட ஆங்கிலத்தில் 'Punctuality' என்று ஒரு வார்த்தை இருக்கிறது. தமிழில் அப்படி ஒரு செளகரியமான வார்த்தை இருப்பதாகவே தெரியவில்லை. 'நிதார்த்தம்' என்று வடமொழியில் சொல்லுகிருர்கள். 'காலம் தவருமலிருக்கை' என்று நீளமாகத் தமிழில் சொல்லுகிறேம். இதற்குச் சரியான ஒரு சொல் இல்லாத குறை பாஷைக்கு இந்தப் பழக்கம் இல்லாத குறை நமக்கு!... இந்த இரண்டு குறைகளையும் நிறை செய்துகொள்ள வேண்டியதுதான்.

பெஸன்ட் அம்மையார் ஒருவரையும் அநாவசியமாய்க் காக்க வைத்ததில்லை. பிரசங்கமானாலும் சரி சாப்பாடானாலும் சரி, பொழுது போக்கானாலும் சரி, பெஸன்ட் அம்மை நேரம் தவறிச் செய்வதே கிடையாது. இந்தக் குறையுள்ளவர்களில் சிலர் கடிகாரத்தைச் சிறிது வேகமாய்ச் செல்லும்படி வைத்திருப்பார்கள். தாங்கள் நேரம் தவறுவதுபோல் கடிகாரமும் நேரம் தவறட்டும் என்ற எண்ணமா? அப்படியில்லை, அதனல் தங்களுடைய தாமதப் பழக்கம் ஒருவாறு ஒழுங்குபடும் என்றுதான் எண்ணம். இந்த எண்ணத்துடன் கடிகாரத்தை வேகமாக்கி வைத்திருந்த ஒருவரை நோக்கி பெஸன்ட் அம்மையார் ஒரு சமயம், 'கடிகாரம் விரைந்து போகிறதென்பதுதான் உங்களுக்குத் தெரியுமே: அப்படியானல் நீங்கள் மந்தமாய்த்தானே தொடர்ந்து காரியம் செய்வீர்கள்?' என்று கேட்டார். எவ்வளவு உண்மையான கேள்வி! பாவம், கடிகாரம் என் செய்யும்? கடிகாரம் பொய்த்தாலும், 'சோமரவி பொய்த்தாலும்' பொய்யாத உள்ளமல்லவா குறித்த காரியத்தைக் குறித்த வேளையில் செய்யக்கூடும்?

சிலர், 'வசதியில்லை: நாங்கள் என்ன செய்வோம்? மோட்டார் வண்டி இருக்கிறதா எங்களுக்கு?' என்று தங்கள்மீது தாங்களே இரக்கம் கொண்டு, காலந் தவறுவதற்குக் காரணம் காட்டுவார்கள். சிலர், 'வெயில், மழை, பனி' என்றெல்லாம் சொல்லி அருமையான நேரத்தை விரயமாக்கிவிடுவார்கள். பெஸன்ட் அம்மை இப்படியெல்லாம் சாக்குப் போக்குச் சொல்லவேமாட்டார். மழை பிரளயமாய்க் கொட்டினலும், வெயில் நெருப்பாய் வீசினலும் குறித்த நேரத்தில் குறித்த இடம் போய்த்திருவார். கார் தயாராக இல்லையென்ருல் நடையைக் கட்டுவார்! குடை இல்லாவிட்டாலும் நடந்துகொண்டே கொட்டும்மழையிலும் போய்விடுவார். அழகான ஆடை தரித்திருப்பார்; 'அது நனைந்து பழுதாய்ப் போமே!' என்றும் பார்க்கமாட்டார். எப்படியாவது வேளை தவருமல் வேலை முடிக்க வேண்டும் என்பதுதான் இவருடைய ஒழுங்கான, கட்டுப்பாடு வாய்ந்த மன உறுதி.

காங்கிரஸ் இயக்கத்தில் பெஸன்ட் அம்மையார் ஈடுபட்டிருந்த காலத்திலே, அரசியல் வாதிகள் குறித்த நேரத்தில் கூட்டங்களுக்கு வந்துவிடமாட்டார்கள். பெஸன்ட் அம்மையோ நேரம் தவருது வந்து பெரும் பொறுமையோடு காத்திருப்பார். இந்தத் தாயன்பும் ஒரு சமயம் அலுத்துச் சலித்துப் பொறுமை இழந்துவிட்டதாம். பிரகாசா! பிரிட்டிஷ்காரர் ஏன் உங்கள் மீது ஆட்சி செலுத்துகிருர்கள் என்பது எனக்குப் புரியத் தொடங்கிவிட்டது' என்று இப்போது பாக்கிஸ்தான் ஹைகமிஷனராயிருக்கும் ஸ்ரீபிரகாசா என்பவரை நோக்கி அம்மையார் சொன்னர். இதைக் கேள்விப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேரு ஸ்ரீபிரகாசாவை நோக்கி, 'அம்மாளுக்கு இவ்வளவு தாமதமாகத்தானே புரியத் தொடங்கியிருக்கிறது!' என்ருராம்.

இன்று பிரிட்டிஷ்காரரர் ஆட்சி செலுத்தவில்லையே நாம் திருந்திவிட்டோமா, என்ன? அப்படி ஒன்றும் அற்புதம் நிகழ்ந்துவிடவில்லை. இந்தச் சுதந்திர இந்தியாவிலாவது நாம் குறித்த காரியங்களைக் குறித்த வேளைகளில் செய்யும் பழக்கத்தை மேற்கொள்வது அவசியமாகும். அப்படியானல் தான் சுதந்திர இந்தியாவைச் செளபாக்கிய இந்தியாவாகவும் செய்துகொள்ளமுடியும்.

* * * *

'சோமரவி பொய்த்தாலும்' பொய்யாத மன உறுதியுடன் செயலாற்றியது பெஸன்ட் என்ற தாயன்பு என்ற இந்த ஒரு விஷயத்தையாவது பெண்களாகிய நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது நலமாகும்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறேம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

23

அன்பு நெறியும் ஆசார நெறியும்

★

ஆற்றங்கரைச் சோலையில் காடன் எதிரே வந்து தொழுது, 'ஏன் இவ்வளவு தாமதம்?' என்று கேட்ட கேள்விக்குத் திண்ணனார் பதில் சொல்லாமல், குன்றின் 'குடுமி' அல்லது உச்சியிலுள்ள அந்தத் தேவரையே நினைத்துக் கொண்டிருந்தார். 'அவர் பசித்திருக்கிறாரே, தனித்திருக்கிறாரே!' என்ற அந்த ஒரே கவலையில் திண்ணனாருக்குக் காடன் கேள்வி காதில் விழவே இல்லை.

ஆகவே நாணன் வருத்தத்தோடு பதில் சொல்லுகிறான்:

அங்(கு) இவன் மலையில் தேவர்
தம்மைக்கண்(டு) அணைத்துக் கொண்டு,
வங்கினைப் பற்றிப் போதா
வல்லுடும் பென்ன நீங்கான்,
இங்கும் அத் தேவர் தின்ன!
இறைச்சி கொண்(டு) ஏகப் போந்தான்;
நம்குலத் தலைமை விட்டான்,
நலப்பட்டான் தேவர்க்(கு),
என்றான்.

[வங்கினை — மரப்பொந்தினை. போதா—போகாத. வல் உடும்பு—வலிமை வாய்ந்தபிடி; போந்தான்—புறப்பட்டு வந்தான். நலப்பட்டான்—வழிப்பட்டான்.]

'மரப் பொந்தைப் பற்றிக் கொண்ட உடும்புபோல் இவர் அந்த மலைத்தேவரைப்பற்றிக் கொண்டு விடமாட்டேன் என்கிறார்; நம் வேடர் குலத் தலைமையை விட்டுவிட்டார், ஐயோ!' என்று நாணன் பெருமூச்சுவிட்டதும் காடன், 'என்ன பித்துக் கொண்டீர்! எங்கள் முதலி (முதன்மையானவர்) அல்லவா?' என்று பரிவு பொங்கிய முகத்துடன் திண்ணனாரை நோக்கினான். அப்படி நோக்கியும் அந்த முகம் திண்ணனாருக்குத் தெரியவே இல்லையாம். அந்தக் 'குடுமித்தேவரு'க்காகப் பன்றி இறைச்சியை நெருப்பிலே வதக்குவதும், பதமாக வெதுப்பியபின் தம் வாயில் இட்டு அதுக்கிப் பார்ப்பதும் அப்படி ருசி பார்த்து இனிமையாகவுள்ள தசைகளை எடுத்து தம் தேவருக்காக வைத்துக்கொள்வதுமாக இருந்தார். 'இதென்ன கூத்தடா!' என்று அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த நாணனும், காடனும் 'பித்தம் தலைக்கேறிவிட்டது!' என்றே முடிவு செய்தார்கள். 'பித்தன்மீது பித்தம்' என்பதையும் அவர்கள் ஒருவாறு தெரிந்துகொண்டார்கள்.

'இவர் பசியால் பீடிக்கப்பட்டிருந்தும், பதமாய்ப் பக்குவப்படுத்திய இறைச்சிகளை உண்ணாமல் ருசி கண்டு வீணாக இலைக்கலத்தில் இட்டு வைக்கிறார். நமக்கும் கொடுக்கிறாரில்லையே! நாம் என் செய்வது? நாகனை அழைத்து வருவோம்; தெய்வங்கள் ஆவேசிக்கக் கூடிய தேவராட்டியையும் அழைத்து வருவோம்' என்ற எண்ணத்துடன் நாணனும், காடனும் திரும்பிப் போனார்கள். திண்ணனாருக்கோ அவர்கள் இருந்ததும் தெரியாது, போனதும் தெரியாது.

இறைச்சிகளை எடுத்துக் கொண்டு கோவிலை நோக்கிப் புறப்பட்டார். தேவரைக் குளிப்பாட்ட வேண்டாமா? கையிலோ ஆற்று நீர் கொண்டு போகப் பாத்திரம் ஒன்றும் இல்லை. தம் வாயிலே பொன் முகலியின் புனித நீர் கொண்டு போனாராம். ஆம், ஊனமுதும் உமிழ்நீருடன் கலந்த நீரும்!—சித்தம் சிவமாகிவிட்டதே? 'மாநதி தண்ணீர் தூய வாயினில் கொண்டு' பெருமானுக்குச் சூட்டி வேண்டிய பூக்களைத் தம்முடைய தலையிலே சூட்டிக்கொண்டு போனாராம்.

'இனியஎம் பிரானார் சாலப்
பசிப்பர்' என்(று) இரங்கி ஏங்கி
நனிவிரைந்(து) இறைவர் வெற்பை
நண்ணினார் திண்ணனார்தான்

[சால- மிகவும். நனி-அதிகமாய். வெற்பு-இங்கே குன்று. நண்ணினார்-அடைந்தார்.]

சுவாமியை அடைந்ததும் என்ன செய்யப் போகிறார், பாருங்கள். அபிஷேகம் செய்ய வேணும்: அதற்கு முன்பே பழைய மலர்களைக் களைய வேணும்; புதிய பூக்களைச் சாத்த வேணும்; ஊனமுது செய்விக்க வேணும்—இல்லையா? ஒரு கையில் வில் இருக்கிறது. ஒரு கையில் மாமிசம்; எந்தக் கையால் எப்படி இறைவன் முடிமேலுள்ள பழைய பூக்களைத் தள்ளுவது? இவர் எப்படிச் சமாளிக்கிறார் என்றுதான் பார்க்கலாமே;

'இளைத்தனர் நாய னார்!'என்(று)
ஈண்டச்சென்(று) எய்தி,
வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு,
முடிமிசை மலரைக் காலில்.
வளைத்தபொன் செருப்பால்
மாற்றி,
வாயின்மஞ் சனநீர் தன்னை
விளைத்தஅன்(பு)உமிழ்வார் போல
விமலனார் முடிமேல் விட்டார்.

[நாயனார்- சிவபெருமான். ஈண்ட-விரைவாக. எய்தி-அடைந்து. வெற்பின்-மலையின். முதல்-முதன்மையான தெய்வம். விமலனார்-குற்றமற்ற பெருமான்.]

அந்தக் கால்—செருப்பைப் 'பொன் செருப்பு' என்று காட்டுவதைப் பாருங்கள்: தூய பக்திச் செயலைத் தூயபக்திக் கண்களால் பார்க்கும் அழகு!

இந்த அபூர்வ அபிஷேகத்துக்குப்பின் தமது தலையிலுள்ள பூக்களைப் பெருமான்மீது விழச்செய்து, மாமிசத்தை எதிரே வைத்து, 'ஆண்டவனே! இந்த இறைச்சிகள், இனிமையானவை: நானே பல்லால் அதுக்கிச் சுவை பார்த்துக்கொண்டு வந்திருக்கிறேன். அமுது செய்தருளும் என்று பிரார்த்தித்தார்.

சூரியன் அஸ்தமித்து அந்தி மயங்கி இருள் சூழ்ந்துகொண்டது. இரவில் கொடிய மிருகங்களால் காளத்திநாதருக்குக் கொடிய தீங்கு விளையக்கூடுமென்று அஞ்சிய திண்ணனார்,

செவ்விய அன்பு தாங்கித்,
திருக்கையில் சிலையும் தாங்கி
மைவரை என்ன ஐயர்
மருங்குநின்(று) அகலா
நின்றார்.

[செவ்விய-புதுமையும் அழகும் வாய்ந்த: சிலை-வில். மைவரை-கரியமலை. ஐயர்-சுவாமி. மருங்கு-பக்கம்.]

மெய்யன்பை அகத்திலே தாங்கிய இந்த வேடர், கொடுந்தவம் கிடந்த முனிவர்களும் காணாதபேறு கண்டுவிட்டாராம்:

சார்வருந் தவங்கள் செய்து,
முனிவரும் அமரர் தாமும்,
கார்வரை அடவி சேர்ந்தும்
காணுதற்(கு)அரியார் தம்மை,
ஆர்வமுன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்,
ள்இருள் நீங்க நின்றார்.

[சார்வருந்தவங்கள் —செய்ய முடியாத தவங்கள். அமரர் —தேவர். கார்வரை அடவி—மேகம் தவழும் மலையிலும், அதைச் சார்ந்த காட்டிலும். அரியார் தம்மை—சிவபெருமானை. ஆரா அன்பு—என்றும் திருப்தி பிறவாத அன்பு. நீள் இருள்—நீண்ட இருள், அக இருளாகிய அஞ்ஞானம்.]

இப்படி 'நீளிருள் நீங்க' நின்ற வேடர் பெருமான்,

அறம் கிடந்த சிந்தையராய்
ஆசையெலாம் துறந்த

கடுந்தவசிகளையும் வென்றுவிட்ட அதிவீரராகி விட்டார். அறம் தெரியாமல், ஆசை துறவாமல் கடுந்தவம் கிடந்து கஷ்டப்படாமல் பக்தி என்ற ஒரே ஆசை கடந்த சிந்தையரான இவரை, சேக்கிழார்,

கருங்கடல் என்ன நின்று
கண்துயி லாத வீரர்

என்று கண்டு காட்டுகிறார்.

பொழுது புலர்ந்ததும், பெருமானுக்கு உணவு தேட வேண்டுமே என்ற ஆசைதான். தமக்கோ உறக்கமில்லாதது போல் பசியும் இல்லாமல் போய் விட்டதா? திண்ணனார் சிவபெருமானை வணங்கி அவருக்காக வேட்டையாடப் புறப்பட்டார்.

அச்சமயம் காளத்திநாதருக்கு வழக்கமாகப் பூஜை செய்யும் பிராமணர் வந்தார். இறைச்சித்துண்டுகளையும் எலும்புகளையும் கண்டு திடுக்கிட்டார். தூரத்திலே கால் வைத்துக் கால்வைத்துப் போனார். 'வேடர்களே இந்த அசுத்தமான காரியத்தைச் செய்திருக்க வேணும்' என நெஞ்சழிந்து உடல் பதறிப் புலம்பினார். பிறகு ஜாக்கிரதையாகக் கோவிலைச் சுத்தம் செய்து நீராடி ஆசாரமாக வந்து நிகழ்ந்த குற்றம் நீங்கும்படியாகப்

பரிகாரம் செய்து விமரிசையாகப் பூஜையையும் முடித்துக் கொண்டு மன அமைதியோடு திரும்பினார்.

'துணிந்தமறை மொழியாலே துதி செய்து' வைதிகமாய்ப் பூஜையை ஆகமம் சொன்னபடி முடித்துச் சென்ற இந்தச் சிவவேதியரைச் சேக்கிழார்.

மைதழையும் கண்டத்து
மலைமருந்தை வழிபாடு
செய்துவரும் தவமுடைய
முனிவர்சிவ கோசரியார்

[மைதழையும் கண்டத்து- நீலகண்டத்தையுடைய. மலை மருந்து -மலையில் மருந்தாக இருக்கும் சுவாமி.]

என்று அறிமுகப் படுத்தியுள்ளார்.



சிவகோசரியார் பூஜை முடித்துத் திரும்பிப் போனதும் திண்ணனார் வேட்டை முடித்துத் திரும்பி வந்தார். முன்போல் பிராமணர் அர்ச்சித்திருந்த பூக்களைச் செருப்புக் காலால் அகற்றி. மாமிசத்தை ஈசன்முன் வைத்துத் தமது பூஜையை முடித்தார். இப்போது ஊனைத் தேனுடன் கலந்து கொண்டு வந்திருந்தார். 'இந்த ஊனின் திரு அமுது முத்தியதைப் பார்க்கிலும் இனிமையானது' என்றார்.

'ஆன உறுப்(பு) இறைச்சி
அமு(து)
அடியேனும் சுவை கண்டேன்,
தேனும் உடன் கலந்த(து) இது
தித்திக்கும்' என மொழிந்தார்

இரவெல்லாம்பெருமானைக்காத்திருந்து மறுபடியும் பகலில் வேட்டைக்குப் போனார் இது கண்ட சிவவேதியர் மிகவும் மனந் தளர்ந்து வழக்கம்போல் பிராயச்சித்தம் செய்துஆகமநெறிக்கிணங்கச் சிவபூஜையைச் செய்துமுடித்தார். இப்படிப் பல தினங்கள் கழிந்தன.

இதற்கிடையே நாணனும்,காடனும் ஊருக்குப்போய் நாகனிடம் செய்தி சொல்ல அவன் தேவராட்டியையும் அழைத்துக்கொண்டு வந்து மைந்தரைத் தன் வழிப் படுத்தப் பல வழிகளிலும் முயன்றான். முயன்றும் பயன் விளையாததால் மனம் நொந்து வீடு திரும்பினான்.

சிவகோசரியாரும்மனம்நொந்து ஒரு நாள் ஆண்டவன் எதிரே நின்று,

'என்னுடைய நாயகனே!
இது செய்தார் தமைக்
காணேன்;
உன்னுடைய திருவருளால்
ஒழித்தருள வேண்டும்' என,

அன்றிரவே வேதியர் ஒரு வேதியரைச் சந்தித்தார். அந்த வேதியரின் ஜடை மகுடம் போல் முடிக்கப்பெற்று, அம்முடியிலிருந்து மின்னல்கள் பளிச்சுப் பளிச்சென்று பாய்ந்தன.

அந்த வேதியர் இந்த வேதியரை நோக்கி, 'அவனைக் கேவலம் வேடன் என்று நீ நினைக்கவேண்டாம். அவன் அன்பன்!' என்றார். 'அவனுடைய செயல்களெல்லாம் தந்தைக்கு அருமைக் குழந்தையின் செயல்கள் எப்படியோ, அப்படியே இனிமையாயிருக்கின்றன. அவன் அகம் நெகிழ்ந்து நம்மை நோக்கிச் சொல்லும் சொற்களெல்லாம் வேத மந்திரங்களைக் காட்டிலும் தூயன. நாளை நீயே கண்டு கொள்வாய்!' என்று சொல்லி விட்டு அந்த உருவம் மின்னல் போல் மறைந்து போயிற்று.

சிவகோசரியார் விழித்துக் கொண்டார். ஆம், அஞ்ஞானக் கனவுகளிலிருந்தும் விழித்துக் கொண்டார்.

எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப்பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக "வாரப்பதிப்பு" என்று எழுதியனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் விலாசமிட்ட தபால கவர்களையோ, தபால தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.



ராமனாதனைக் கொண்டுபோன கார் ஒரு சந்தியில் டிராமுக்காகப் போலீஸ் கைக்காட்டியால் நிறுத்தப்பட்டது. டிராம் மறைவு விலகியதும் ராமனாதன் எதிரே வந்த காரில் பார்த்தது யாரை? பத்மாவின் தாத்தாதான்! அவர் ஒருவாலிபனுடன் உட்கார்ந்திருந்தார். அவ்வாலிபன் ஐச்வர்யத்தின் அறிகுறிகளால் ஜ்வலித்தான். அழகிரிசாமி (பத்மாவின் தாத்தா) ராமனாதனைப்பார்த்தார். ராமனாதன் தலைகுனிந்தான். டிராமின் தடை நீங்கியதும் கார்கள் நகர்ந்தன. அழகிரிசாமி போலீஸ் காரைப் பின்தொடர்ந்தார்.

ராமனாதன் போலீஸ் ‘ஸ்டேஷ’’னில் இறக்கப்பட்டதும் அழகிரிசாமி இன்ஸ்பெக்டரைக்கண்டு பேசினார். இருவரும் ஒருவரையொருவர் முன்னறிந்தவர்போல் பழகிக்கொண்டனர். ராமனாதன், பத்மாவின் தாத்தா தன்னை பலமாகப் போலீஸ் நிர்ப்பந்தத்தில் மாட்டிவைக்க ஏதோ இரக்கமற்ற சூழ்ச்சிகள் செய்வதாய் நினைத்துக்கொண்டு அவரை முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் அவன் காதில் விழுந்த சில வார்த்தைகள் அவனுக்கு ஆச்வாசமளித்தன.

“பெரியவங்க வீட்டுக்குழந்தையல்லவா? நாங்கள் ஜாமீன் இருக்கிறோம். உங்களுக்கு வேண்டியபோது ஆஜர்படுத்துகிறோம். இப்போது விட்டுவிடுங்கள்.”

அழகிரிசாமி சிறிது நேரத்தில் ராமனாதனைத்தன் காரில் ஏறும்படி சொன்னார். போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனைப்பிரியத்துடன் வழியனுப்பினார். ராமனாதன் ஏதோ நல்லகாலம் என்று ஆறுதல்கொண்டு ஆச்சர்யத்துடனும் படிமானத்துடனும் அழகிரியின் பின் காரில் ஏறிக்கொண்டான். அழகிரி தன்னுடன் வந்த வாலிபனுக்கு ராமனாதனை அறிமுகப்படுத்தினார். “பெரியவங்க வீட்டுக் குழந்தை. நம்ப பத்மாவுக்கு “கிளாஸ் மேட்” நம்ப உஷாகிட்டே ரொம்ப சிநேகிதம்.”

ராமனாதனுக்கு பத்மா தாத்தாவின் மொழிகள் அமிர்தமாயிருந்தன. பத்மாவுக்கும் உஷாவுக்கும் நடுவே தன்னுடைய தொடர்பை அவர் பிரித்து நிர்ணயப்படுத்திப்பேசின தோரணையில் ஏதோ அந்தரங்க தாத்பர்யம்இருக்கிறதென்று அவனுக்கு த்வனிக்காமலில்லை. ராமனாதனுக்கு அந்த வாலிபனை அழகிரி அறிமுகப்படுத்தியது இன்னும் அர்த்த புஷ்டியுடனிருந்தது. இவர்தான் டைரக்டர் சக்ரபாணி; மனோரமா ‘டாக்கீஸ்’ முதலாளி. நம்ப பத்மாவிடம் இவருக்கு ரொம்ப நட்பு.”

கார் வீடு சேர்ந்ததும் சிற்றுண்டி உபசாரங்கள் நடந்தன. அதில் பத்மாவும், உஷாவும் கலந்துகொண்டார்கள். ராமனாதன் உஷாவிடம் தனியாகப் பேசிக்கொண்டிருந்தான். சக்ரபாணி பத்மாவைத் தனியே அழைத்துச் சென்றதால் உஷாவிடம் தனித்துப்பேச ராமனாதனுக்கு நிரம்ப அவகாசம் கிடைத்தது. பத்மாவின் தாயார் உஷாவிற்கும் ராமனாதனுக்கும் நட்புத் தொடர்வதில் அனுகூலமாயிருப்பதாயும். அவள் இஷ்டப்படி அழகிரி சம்மதித்திருப்பதாயும், உஷாவுக்கு அவள் தகப்பனாரிடமிருந்து ஜீவனாம்சத் தொகையை வாங்கிக்கொடுத்து அவளிஷ்டப்படி அவளுக்குக் காதலனையும் ரிஜிஸ்டர் விதிப்படி சேர்த்து வைத்து அவளைத்தனியே விட்டுவிட அவர்கள் உத்தேசித்திருப்பதாயும் தெரிந்துகொண்டான். ஆகையால் தன் வரவு ஆதரிக்கப்படுமென்றும் அறிந்துகொண்டான். ராமனாதனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. அன்றுமுதல் அவன் உஷாவை அடிக்கடி வந்து சந்திக்கலானான். வீட்டில் தகப்பனாரும் ஊரில் இல்லாததால். இவனைக் கேட்பவர்களில்லை. தாயார்மட்டும் செக்கைப் பற்றிக் கேட்டாள்— “செக் ‘ஹானர்’ ஆகவில்லை. அப்பா ஊருக்குப் போய்விட்டார்” என்று அவளுக்குப் பதில் சொன்னான்.

பத்மாவுக்கும் சக்ரபாணிக்கும் “ரிஜிஸ்டர் மாரியேஜ்” ஒரு வாரத்திற்குள் நடக்கப் போவதாயும் அதே தேதியில் உஷாவுக்கும் தனக்கும் அதே ஒப்பந்தத்தைச் சேர்த்து நடத்திவிடலாமென்றும் பிரஸ்தாபங்கள் இருப்பதாயும் ஆனால் ஒரு காரணத்தினால்தான் தாமதம் என்றும் அதாவது உஷாவின் பிதா அவள் பெயரில் ஒதுக்கிவைக்கப்போகும் ஜீவனாம்சம் என்ன என்று தீர்மானமாகாததுதான் என்றும், அந்த மனுஷ்யன் இரண்டொரு நாட்களில் வந்து தீரவேண்டுமென்றும், அவர் பேரில் அழகிரி வக்கீல் வைத்து வியவகாரங்கள், தொடர்ந்திருப்பதாயும், இந்த விஷயம் நிர்ணயமானவுடன் இரண்டு பெண்களுக்கும் சேர்த்து ஒரே தினத்தில் விவாஹஒப்பந்த ரிஜிஸ்டர் செய்து

விட அழகிரி உத்தேசித்திருப்பதாயும் ராமனுதன் அறிந்துகொண்டான். ராமனுதனுக்கும் தன் தகப்பனுர் திரும்பிவருமுன் தன் ரிஜிஸ்டர் விவாஹத்தை முடித்துவிடுவதில் அக்கரை ஏற்பட்டது. தான் முதல் செக் போர்ஜரி செய்ததிலிருந்தும்—சீதாராமனை தர்ம சங்கடத்தில் மாட்டிவைத்ததிலிருந்தும் இரண்டாவது செக் மூலம் தகப்பனுர் தன்னிடம் சந்தேகமுள்ளவர் போல் நடந்துகொண்டதிலிருந்தும், அவன் வீட்டிலிருந்து விலகித் தன் போக்கே தனிப்போக்காக ஒதுங்கிக்கொள்ள மனோபாவத்தைத் திடப்படுத்திக் கொண்டு வந்தான்.

* * * * *

ராமனுதன், உஷாவை முதல் முதல் கண்ட ரூமில் அவளுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தான். காலைநேரம். முன் ஹாலில் அழகிரிசாமியும் அவருடன் புதிதாக ஒருவரும் வந்து அமர்ந்து சம்பாஷணை நடத்தலானுர்கள். உஷா "என் தகப்பனுர் வந்துவிட்டார்" என்று ராமனுதனிடம் மெல்லிய குரலில் ரகஸ்யமாகக் கூறினுள்.

"உன் தகப்பனுர் யார்" என்று ராமனுதன் வினவினுன். "நரஸிம்மராஜபுரத்தில் **'ரைஸ்மில்'** வைத்திருந்தாரே, அவர்தான்" என்றுள் உஷா. மேலே விவரங்கள் ராமனுதன் விசாரிக்கு முன் அழகிரிசாமியும் வந்தவரும் பேசிய சில வார்த்தைகள் அவர்கள் கவனத்தைக் கவர்ந்தன.

'என்ன அழகிரிசாமி, கடைசியில் உம் சுபாவத்தைக் காண்பித்துவிட்டீரே. எனக்குக் கடிதாசி போட்டால் போதாதா? **'லாயர் நோட்டீஸ்'** விட்டு நான் ஊரிலில்லாத சமயத்தில் பலபேர் அறிய மானத்தைச் சந்தியில் இழுத்துவிட்டீரே. என் குழந்தைக்கு நான் ஒரு ஏற்பாடு செய்யமாட்டேனு? கௌரவமான முறையில் விவாஹத்தையும் செய்துவைக்கமாட்டேனு? என்னை, ஒரு எதிரியைப்போல நினைத்து நீர் வியவஹாரம் தொடர ஏற்பாடு செய்தது மிகவும் கண்டிக்கத்தக்கது."

"சரிதான் சாமி, நீங்க சொல்லுகிறது ஏதோ பத்து வருஷம் **தனலக்ஷ்மியை** நரஸிம்மராஜபுரத்தில் வைத்துக் காப்பாத்தினீங்க. ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. பிற்பாடு தனலக்ஷ்மியை ஐந்தாறு வருஷமாக ஏனென்று கேட்கவில்லை. அது இங்கேயும் அங்கேயும் கெட்டலைந்து கஷ்டப்பட்டுக் கடைசியில் நமக்குக் கொடுத்துவைக்கவில்லைங்க. இந்தப்பெண்ணும் அனுதையாய்ப் போய்விட்டதேயென்று நான் ஒரு வருஷகாலமாய் கொண்டுவந்து வைத்துக் காப்பாற்றி வருகிறேன். அதுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணணுமோல்லியோ?"

"என்ன அழகிரிசாமி, நீர் பேசரதைப் பார்த்தால் அது யாரோ, நீர் யாரோ என்பது போலிருக்கிறது! தனலக்ஷ்மி உம்மகள்தானே. அதன் குழந்தை உமக்குப் பத்மாவைப்போல் ஒரு பேத்திதானே.

உம்கிட்டே என்ன பணம் குறைச்சலாயிருக்கா? ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் மற்றொரு கண்ணுக்குச் சுண்ணும்பும் வைப்பது நியாயமா? அந்தப்பெண் சுவாதீனமாயும் இந்தப்பெண் பராதீனமாகவும் போயிடுத்தா உமக்கு? நான் கொடுத்துத்தானு இந்தப் பெண் சாப்பிடணும்? நீரும் அதுக்கு ஏதாவது ஒரு பங்கு ஏற்படுத்தத்தான் வேணும். நான் தனலட்சுமிக்குக் கொஞ்ச நகைகள் போட்டிருப்பேனு? உலகத்திலுள்ள நகையில் எது குறைச்சல் அவளுக்கு? அந்த நகையெல்லாம் இப்போ எங்கே போச்சு? அந்தக் காலத்திலேயே ரூபாய் பதினுயிரத்துக்கு நகைகள் செய்து கொடுத்திருக்கிறேன். நீர் எப்பொழுது வியவஹாரத்துக்கு என்னை இழுக்க நினைக்கிறீரோ அப்பொழுது நான் அந்தக் கணக்குகளை உம்மைக் கேட்கத்தானே வேண்டும்?"

"இருக்கிற நகைகள் இந்தப் பெண்ணிடம்தானிருக்கின்றன. ஐந்தாறு வருஷம் நீங்கள் கவனிக்காமலிருந்ததில் தனலெட்சுமி ஏதோ இதையும் அதையும் விற்றுச் சுட்டு சாப்பிட்டுவிட்டாற் போலிருக்கிறது. சொச்சம் மிச்சத்தை இந்தப் பெண்தான் உடம்பில் போட்டுக்கொண்டிருக்கிறது."

"அழகிரி சாமி, நீர் பேசுவது உம்முடைய **ஈவிரக்கமல்லாத** தன்மையைக் காண்பிக்கிறது. லக்ஷக்கணக்காக லேவாதேவி பண்ணும் நீர் உம்முடைய பெண் நகையை விற்றுச் சுட்டுச் சாப்பிடும்படியான ஸ்திதியில் அவளை உபேக்ஷித்தது மிகக் கொடுமையிலும் கொடுமை. எந்தத் தகப்பனுராவது அப்படிச் செய்திருப்பானு?"

"அந்தப் பெண்ணின் போக்கு ஒரு மாதிரி. முதலிலிருந்தே எனக்

குப் பிடிக்கவில்லைங்க. அதனால் விலகிப் போயிடுத்துங்க''

"என்ன போக்குப் பிடிக்காத போனாலும் என்ன விலகிப்போயிருந்தாலும், ஆபத்துக்குதவாத தகப்பன், உம்மைப்போலொருவன் இருக்கமாட்டான், உம் நடத்தையெல்லாம் நீர் மறந்துவிட்டு இப்பொழுது என்னிடத்தில் உம் கைவரிசையைச் செலுத்தப் பார்க்கிறீர். கோர்ட்டில் போனால் வழக்காட வழி எனக்குத் தெரியும். ஆனாலும் அந்தக் குழந்தையிடம் உள்ள ஒரு அனுதாபத்தின்பேரில் ஏதோ கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். நீர் என்ன கொடுக்கிறீர் அதை முதலில் சொல்லும். உம்முடைய கடமையைக் கழித்துக்கொள்ள நீர் யோசிப்பதை நான் ஒருநாளும் நிறைவேற விடமாட்டேன் ஆகையால் நிதானித்துப் பேசும். ஒரே உறுதி வார்த்தை சொல்லுகிறேன் கேளும் நீர் அந்தப் பெண்ணின்பேரில் எவ்வளவு ஸ்தாபனம் செய்கிறீரோ அவ்வளவு தொகை நானும் செய்யத் தயாராகவிருக்கிறேன். இருவருடைய பாத்யதையும் சமமான பாத்யதை என்ற அடிப்படையில் தஸ்தவேஜி ஏற்படுத்துவதாயிருந்தால் என்னிடம் பேசும், இல்லையேல் கோர்ட்டில் பேசிக்கொள்வோம். அந்தப் பெண்ணுக்குக் கோர்ட்டு மூலம் உம் சொத்தில் சரி பாதி பங்கை வாங்கி வைக்காதபோனால் என் பெயரை மாற்றிக்கொள்வேன். உம் மிரட்டல்களுக்கு எல்லாம் பயப்படுபவன் நானல்ல.''

"அய்யா' ஸ்வாமி, நீங்க கோவிச்சுக்காதீங்க. நீங்க சொல்றபடி கேட்க நான் தயாராகவிருக்கிறேன். நம் பகிட்டேயிருந்த பணமெல்லாம் சேதமாய்ப் போயிடுத்துங்க. ஏதோ இருக்கிறதில் கொஞ்சம் கொடுக்கரேங்க. நீங்களும் அம்மாதிரி கொடுத்து ஒரு ஏற்பாட்டைப்பண்ணி அந்தக் குழந்தைக்கு அதுவாகப் பார்த்து விரும்பும் வரனுக்கு ரிஜிஸ்டர் விவாஹத்தையும் நீங்க கூடயிருந்து முடித்து வைத்துவிடுங்க. பத்மாவுக்கு ஒரு வரன் நிச்சயம் பண்ணியிருக்கிறேங்க. இரண்டையும் சேர்த்து நாளை வெள்ளிக்கிழமையே முடித்துவிடலாமென்று உத்தேசம். நீங்க இரண்டு நாளைக்கு இருக்கலாமோல்லியோ?''

''இருப்பதைப்பற்றி ஆட்சேபமில்லை. பத்மாவுக்கு எப்படி நிச்சயம் பண்ணியிருக்கிறீர்''

''டைரெக்டர் சக்ரபாணியைத் தீர்மானித்திருக்கிறது''

''ஓஹோ! அப்பொழுது அவள் பேரில் எவ்வளவு சொத்து எழுதி வைக்கிறீர்?''

"சக்ரபாணி பெரிய லக்ஷாதிபதி. அவர் ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை. நான் ஏதாவது ஒரு பத்து ரூபாய்க்கு செய்யலாமென்று உத்தேசம்.''

"அந்தப்படி உஷாவுக்கும் செய்யலாமோல்லியோ?''

''இதுக்கு நீங்க சொன்னபடி சமபாத்யதையாகவே ஏற்றுக்கொள்வோம். நான் ஐயாயிரத்துக்கு ஏற்பாடு பண்ணுகிறேன். தாங்களும் அந்தத் தொகைக்குச் சம்மதித்தால் சரியாய்ப் போய் விடுகிறது''

"சரி வரன் எப்படி நிச்சயம் பண்ணியிருக்கிறீர். குழந்தையைக் கூப்பிடும், பார்ப்போம்''

"பெரியவங்க வீட்டுக் குழந்தை தான் இங்கேகூட வந்திருக்கு. குழந்தையையும் கூப்பிடரேன் அவரையும் கூப்பிடரேன் பாருங்க.'' (தொடரும்)



டாமி வாக்கர் என்ற விமானி, மரத்தால் செய்த சுவரின்மீது தமது விமானத்தை மோதி நொறுங்கச் செய்து காட்டினார் சமீபத்தில். இது ஸ்கிராண்டன் வில்க்ஸபாரி விமான கூடத்தில் நடந்தது.

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு
"நஞ்சன்கூடு பல்பொடி"
பாகடெரியின் சிறந்த மருந்துகள்
குழந்தைகளுக்கு:
12 காஸ்மர் கஸ்தூரி மாத்திரை
18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்
77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விடிபேதிக்கும் (காலரா)
23 பெயினே (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு.....
61 நஞ்சன்கூடு பல்பொடி பல் உபாதைகளையும் கண்டிக்க
78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்
55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி.
மற்ற மருந்து ஜாபிதாவிற்கு எழுதவும்
ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் வீதி, மதராஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.





(மேல்)

எம்பயர் ஸ்டேட் மாளிகையின்மீது சென்ற மாதம்11-ந்தேதி ஆயிரக்கணக்கான பறவைகள் பறந்து மோதி இறந்து மாளிகையில் விழுந்துவிட்டன. நியூயார்க் விமானக் கட்டிடத்தில் நால்வர் அவற்றை திரட்டிஒதுக்கி அப்புறப்படுத்துகின்றனர்.

(கீழ்)

இரண்டாவது யுத்தத்துக்குப் பிறகு ஹாலண்டில் மீண்டும் முன்னேற்றமேற்பட்டுளது. ஆலபர்ட் கிளிப் மார்க்கெட்டில் இப்போது வர்த்தகம் கொழிக்கிறது. டச்சுக்காரர்கள் இந்தமார்க்கெட்டில்விற்காத பொருளில்லை; வாங்காத பொருளுமில்லை.



சென்றமாதம் 15-ந்தேதியன்று யுத்தகாலத்தில் பிராபல்யம் பெற்ற மேஜர் ரிச்சர்டு ஜான்ஸன் மணிக்கு 670098மைல் வேகத்தில் விமானத்தை ஓட்டிக்காட்டினர். இதுவரை இவ்வளவு வேகமாக ஓட்டியவரில்லை.



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

சக்தி ஆரூடம்!

★

சென்னை தியாகராய நகர் பிரபல டாக்டர் K. ராகவன் L. I. M. எழுதுகிருர்:— "தங்கள் சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. ஜாதக பலன்கள் கூறும் திறமை வியக்கத்தக்கது."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணுசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

மவுண்ட் ரோடு, சென்னை.



விடாத இருமல், ஜலதோஷம், இன்புளூயன்ஸாவுக்கு பெப்ஸ் தேவையாகவிருக்கும்

நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லைகள் சீக்கிரமாகப் பலனளிக்கும் விதத்தில் வேலை செய்கின்றன. சுவாசத்துடன் மருந்து சத்துக்கள் உட்சென்று தகராறுக்கு காரணமானதை ஒழிக்கும். பெப்ஸை மென்றவுடன் அதன் கிருமிநாச குணமளிக்கும் ஆவிகள் இருமலை நிறுத்தி புண்ணாகிய உறுப்புகளைச் சமனமூட்டி, கிருமிகளை நாசம் செய்து அடைப்பை நீக்கி உமது மார்புக்கும் தொண்டைக்கும் சுகமுண்டாக்கும்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி பி. டி. மதராஸ்.

பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதை குறிக்கும் படம்.

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

மறுக்க முடியாத உண்மை!

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம்: 1936.)

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S.மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்

மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள் காலணாவுக்கு இரண்டு.

சென்னைக்கு சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை,

தயாரிப்பவர்:

மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
“தபோநிதி” தியாகராயநகர், மதராஸ் 17.

டெலிபோன்: 2246, தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்,
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.



குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

பாத்ருடுவின் “பால சஞ்சீவினி”

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

“பீம-வீர்” பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்

40—நாள் மருந்து ரூ. 3-12-0.
பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணையில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட்	ரூ. 2-0.	8.	ரோஜா செண்ட்	ரூ. 1-8.
2.	கியோரா	,, 2-0.	9.	சுரங்கி	,, 1-8.
3.	காஸ்	,, 2-0.	10.	லில்லி	,, 1-0.
4.	போகுல்	,, 1-8.	11.	லோடஸ்	,, 1-0.
5.	ஜாஸ்மின்	,, 1-8.	12.	ஆரஞ்சு	,, 1-0.
6.	கதம்பம்	,, 1-8.	13.	மோதியா	,, 1-0.
7.	ஹேனு	,, 1-8.	14.	கோலோன்	,, 1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில். பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.
S. PAUL & Co., Perfumers, (Dept. S.W.) 4, Hospital St., **Calcutta 13.**

ஸரஸ்வதி தேவி புகழ்

ராஜ்யஸேவா நிரத செம்மங்குடி
ஸ்ரீனிவாஸய்யர் ஸ்வரப்படுத்தியது

வெள்ளைத்தாமரைப் பூவிலிருப்பாள்
வீணைசெய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளையின்பங் குலவுகவிதை
கூறுபாவலர் உள்ளத்திருப்பாள்
உள்ளதாம் பொருள்தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தினுண்ணின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணைவாசகத்துட் பொருளாவாள் (வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டிலிருப்பாள்
மக்கள் பேசும் மழலையிலுள்ளாள்
கீதம்பாடும் குயிலின்குரலைக்
கிளியினாவை யிருப்பிடங்கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத்தாகிக்
குலவுசித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடையுற்றாள்
இன்பமே வடிவாகிடப்பெற்றாள் (வெள்ளை

வஞ்சமற்ற தொழில்புரிந்துண்டு
  வாழுமாந்தர் குலதெய்வமாவாள்
வெஞ்சமர்க்குயிராகிய கொல்லர்
  வித்தையோர்ந்திடு சிற்பியர்தச்சர்
மிஞ்சநற்பொருள் வாணிகஞ்செய்வோர்
  வீரமன்னர் பின்வேதியர்யாரும்
தஞ்சமென்று வணங்கிடும்தெய்வம்
  தரணிமீ தறிவாகியதெய்வம் (வெள்ளை)

தெய்வம்யாவும் உணர்ந்திடுந்தெய்வம்
  தீமைகாட்டி விலக்கிடுந்தெய்வம்]
உய்வமென்ற கருத்துடையோர்கள்
  உயிரினுக்குயிராகிய தெய்வம்
செய்வமென்றொரு செய்கையெடுப்போர்
  செம்மை நாடிப்பணிந்திடும்தெய்வம்
கைவருந்தி உழைப்பவர்தெய்வம்
  கவிஞர்தெய்வம், கடவுளர்தெய்வம் (வெள்ளை)

செந்தமிழ் மணிநாட்டிடையுள்ளீர் !
  சேர்ந்தித்தேவை வணங்குவம் வாரீர் !
வந்தனம் இவட்கே செய்வதென்றால்
  வாழி யஃதிங்கெளிதன்றுகண்டீர் !
மந்திரத்தை முணுமுணுத்தேட்டை
  வரிசையாக அடுக்கியதன்மேல்
சந்தனத்தை மலரையிடுவோர்
  சாததிரம் இவள் பூசனையன்றாம் (வெ.., ளை)

வீடுகோறும் கலையின் விளக்கம்
  வீதிதோறும் இரண்டொருபள்ளி
நாடுமுற்றிலும் உள்ளன வூர்கள்
  நகர்களெங்கும் பலபலபள்ளி
தேடுகல் வியலாததொரூரை
  தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்கதும் அமுதமென் அன்னை
  கேண்மைகொள்ள வழியிவைகண்டீர்
(வெள்ளை)



ஊணர்தேசம் யவனர்தன் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு
சேணகன்றதோர் சிற்றடிச்சீனம்
செல்வப் பாரசிகப் பழந்தேசம்
தோணலத்த துருக்கம் மிசிரம்
சூழ்கடற்கப் புறத்தினிலின்னும்
காணும் பற்பல நாட்டிடையெல்லாம்
கல்வித்தேவி யொளிமிகுந்தோங்க (வெள்ளை)

ஞானமென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரதநாட்டிடைவந்தீர்!
ஊனமின்று பெரிதிழைக்கின்றீர்!
ஓங்குகல்வி யுழைப்பைமறந்தீர்!
மானமற்று விலங்குகளொப்ப
மண்ணில்வாழ்வதை வாழ்வெனலாமோ?
போனதற்கு வருந்துதல்வேண்டா,
புன்மைதீர்ப்ப முயலுவம்வாரீர்! (வெள்ளை)

இன்னறுங் கனிச்சோலைகள்செய்தல்
இனியநீர்த்தண் சுனைகளியற்றல்
அன்னசத்திரம் ஆயிரம்வைத்தல்
ஆலயம் பதினாயிரநாட்டல்
பின்னருள்ள தருமங்கள்யாவும்
பெயர்விளங்கி யொளிரநிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோரேழைக் கெழுத்தறிவித்தல் (வெள்ளை)

நிதிமிகுந்தவர் பொற்குவைதாரீர்!
நிதிகுறைந்தவர் காசுகள்தாரீர்!
அதுவுமற்றவர் வாய்ச்சொலருளீர்!
ஆண்மையாள ருழைப்பினைநல்கீர்!
மதுரத்தேமொழி மாதர்களெல்லாம்
வாணிபூசைக் குரியனபேசீர்!
எதுவுநல்கியிங் கெவ்வகையானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம்வாரீர்!

(வெள்ளை)

ராகம் : ஸரஸ்வதி

தாளம் : ஆதி (1 களை)

ஆ: ஸரிமபதஸ். அ: ஸ்நிதபமரிஸ.

(64—வது மேளத்தில் ஜன்யம்.)

பல்லவி

; ; ; *	பா பா பம ரி ரி	ஸா ; ; ஸா	நிதா ஸா ஸா ‖
. . .	வெ ள்ளை த்தா . . ம	ரை . ப் பூ	. வி வி ரு
ரி , மா ; *	பா பா ப ம ரி ரி	ஸா ; ; ரிஸ	நி தா ஸா ரி ‖
ப் பா ள் .	வெ ள்ளை த் தா . . ம	ரை . . ப்பூ .	. வி வி ரு .
பம ரிஸ ரிம *	பா பத ப ம ரி ரி	ஸரி பமரிஸ ரிஸ	நி தா ஸா ரி ‖
ப்பா . . . ள்	வெ ள்ளை . த்தா . ம	ரை . . . . ப்பூ .	. வி வி ரு
பம ரிஸ ரிம *	பா பத ப ம ரி ரி	ஸரி பமரிஸ ரிஸ	நித ஸா ரி மா ‖
ப்பா . . . ள்	வெள்ளை . த்தா . ம	ரை . . . . . ப்பூ .	. . வி வி ரு
பத நித பத *	ப ம ரி ஸா ரி மா	பா ; ; பா	தா ஸ்ரிஸ் நித பத ‖
ப்பா . . . ள்	வி . , ணை செ ய்	யு ம் . ஒ	லி யி . . லி . ரு .
பம ரிஸ ரிம *	"வெள்ளைத்தாமரை"		
ப்பா . . . ள்			

அநுபல்லவி

; ; ; *	ஸ்ா ; ஸ்த தா நி	தபபா ; ; ம பா	தா ஸ்ா ரி ரி ‖
. . .	கொ ள்ளை . யி ன்	பம் . . . . கு	ல வு க வி
ஸா ; ; *	ஸ்ா ; ஸ்த ரிஸ் நித	தபபா ; ; ம பா	தா ஸ்ா ரி ஸ்ா ‖
தை . .	கொ ள்ளை . யின் . .	பம் . . . . கு	ல வு க வி
ஸ்ஸ் நித பத *	ஸ்ா ; ஸ்த ரிஸ் நித	தபபா ; ; ம பா	தா ஸ்ா ரிப்ம் ‖
தை	கொள் ளை . யின் . .	பா் . . . . கு	ல வு கவி .
ரிஸ் ரி ஸ்ா *	ஸ்ா ; ஸ்ா ஸ்நி நித	பா தா ; ரிஸ்	நிதா பா பத ‖
தை . . .	கூ . று பா . . .	வ ல ர் உள்	. ள த்திரு .
பம ரிஸ ரிம *	"வெள்ளைத்தாமரை"		
ப்பா . . . ள்			

சரணம்

; ; ; *	பா ப மா பா , தா	தா ; ; பா	தா ஸ்ா ஸ்ஸ் நித ‖
. . .	உ ள்ள . தா ம் பொ	ரு ள் . தே	. டி . யு . ணர்
பா ; ; *	பா த ப ம பா , தா	தா ; ; பா	தா ரிஸ் நி தா ‖
ந்தே . .	உ ள்ள . . தாம் பொ	ரு ள் . தே	. டி . யுணர்
பா ; ; *	பா பா ப ம ரி ரி	ரி ஸா ; ரி	ஸா ரி மா ; ‖
ந்தே . . .	ஓ தும் வே . . த	த்தி னு ள் நி	ன் ஒ ளி ர்
பா ; ; *	ஸ்ா ; ஸ் த த நி த	தபபா ; ; பம	பா தா பா தா ‖
வா ள் .	க ள் ள . ம . .	ற்ற . . . . மு .	ளி வ ர் கள்
ஸ்ா , ஸ்ா *	ஸா ; ஸ் த ரி ஸ் நி த	தபபா ; ; ம பத	ஸ்ா பத ஸ்ா ஸ்ா ‖
கூ . றும்	க ள் ள . ம . . .	ற்ற . . . . . மு .	ளி வ . ர் கள்
ரி ம்ா ரி . *	ஸ்ா ஸ்ா ஸ்நி நி த தா	பா தா ஸ்ா தாரிஸ்	நி தா பா பத ‖
கூ . றும்	க ரு ணை . . . வா	. ச க த்துட்	பொ ரு ளா .
ப ம ரி ஸ ரி ம *	"வெள்ளைத்தாமரை"		
. . வா . . ள்			

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285 Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்

(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30மாத்திரை சீசா 1 ரூ. 7.

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசிகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி

(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

ஆனந்த குஸுமாகர லேகியம்

துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில தேவையுள்ளோர் தபால் சிலவு அணு 14 முன் பணம அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காடலாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால்

H. O. TRIVANDRUM
189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி. கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன், தெரு. சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு. பெங்களூர் 179 SEA ST., COLOMBO

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானல், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானல் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்பசித்து வெற்றிபெற்ற ஒரு மகானல் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணு 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
30, சாந்தோம், சென்னை 4.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.



அழகானவை

மனதைக்கவரும் நவீன மோஸ்தர் நகைகளே ஸூரஜ்மல்ஸ் கம்பெனியில் இருக்கின்றன. அவரவருக்குப் பிடித்தமான வித விதமான ரகமும், அழகும் பொருந்திய நகைகள்.

சிறந்தரகம்

ஸூரஜ்மல்ஸ் உண்மையான சிறந்த ரகத்துக்கு பெயர் பெற்றவர்கள். பொறுக்கி எடுத்த கற்களே நகைகளுக்கு அதிர்ஷ்டமளிப்பவை. சுத்தமானதும், பிரகாசமுள்ளதும் உயர்ந்த ரக முள்ளதுமான ரத்னங்களே உபயோகிக்கப்படுகின்றன........................ அவற்றின் கட்டிடமும் வேலைப்பாடும் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் வசதியான தொழிற்சாலையில் செய்யப்படுவதால் இந்த ஸூரஜ்மல்ஸ் நகைகள் நீங்கள் விரும்பிப் போற்றத்தக்கவை.

நேரடியான
வியாபாரம்
நன்மை தரும்.

நம்பிக்கையானவை

1895-ஆம் முதல் ஐம்பது வருஷங்களுக்கு மேலாக ஸூரஜ்மல்ஸ் நாடு முழுவதிலும் கியாதி பெற்றுள்ளனர். இப்புகழுக்கு இணையே கிடையாது. யாருக்கும் ஒரே விலை என்ற கொள்கை நாணயமான வியாபாரத்தின் அடையாளம். ஒவ்வொரு நகையுடனும் அவற்றின் உயர் ரகம், திருப்தியளிக்கும் தன்மைக்கு அவர்களது உத்தரவாதமும் கிடைக்கின்றது. உங்கள் நண்பர்கள் கொடுக்கும் விலையே நீங்களும் கொடுக்கிறீர்கள். ஆகையால் நம்பிக்கையுடன் நீங்கள் நேரிலே தபால் மூலம் நகைகள் வாங்க முடியும்.

ஸூரஜ்மல்ஸ்

வைர வியாபாரிகள்

313, நேதாஜி ரோட் : : மதராஸ்.